# முல்லைக்காடு



T18573
73
03

பாரதிதாசன்

# முல்லைக் காடு

பாவேந்தர்

பாரதிதாசன்

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கித் தெரு, சென்னை-600001.

முதல் பதிப்பு: 15, மே, 1993.
விலை ரூ. 7.50

பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பனார்
மணிவிழா ஆண்டு வெளியீடு

## பதிப்புச் செம்மல்

### டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்; திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; புலவர் குழு உறுப்பினர்; பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருபவர். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பன்னிரண்டு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய 'தாகூர்' நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர் துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களை வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். பதிப்புச் செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம்:
மணிவாசகர் நூலகம்
12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
55, லிங்கித் தெரு, சென்னை - 600 001.
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, கிளைவ்ஸ் கட்டிடம், திருச்சி - 620 002.
தொலைபேசி : சிதம்பரம் 2799 - சென்னை 513707

பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை 600 013.

T. 18573



பாவேந்தர்
பாரதிதாசன்
(1891-1964)

செழுமைமிக்க வளமான தூய தமிழ் மரபினை பாவேந்தர் உருவாக்கினார். பெருமைமிகு தமிழ் மரபில் பூத்துக்குலுங்கும் புதுமலர்கள் பலவாகும்.

தமிழ் உணர்ச்சியும், தமிழ்ப்பற்றும் பெருக்கெடுக்கும் தமிழியக்கங்கண்ட தலைமகனார் பாவேந்தர். தமிழின் பன்முக நலங்களை அவரைப் போல் பாடியவர் இலர். தமிழை வழிபடுந் தெய்வமாக்கி வழிபட தமிழ் அடியார் திருக்கூட்டத்தை உருவாக்கினார். துறைதோறும் தமிழுக்குப் புதுமை சேர்க்க ஆற்றல்மிகு இளைஞர் அணியை உருவாக்கிய பெருமை பாவேந்தரையே சாரும். அவர் காலத்து இதழ்கள் அவரைப் புறக்கணித்தாலும் தமிழ் அறிஞர்களும், புலவர்களும், பேச்சாளர்களும் மேடைகள் தோறும் பாவேந்தரின் பாடல்களை முழக்கம் செய்தனர். வெள்ளம் போல் பரவிற்று பாவேந்தர் பாடல்கள். பாவேந்தரும் பெருமை பெற்றார். பாடல்களைப் பரப்பிய வரும் பெருமை பெற்றனர். சிற்றூர்கள் பேரூர்கள் பாவேந்தரின் பாடல்களுக்குத் தவம் கிடந்தன. நவம்பர் 1991—இல் பாவேந்தரின் பாட்டுச் செல்வம் நாட்டுடைமை யாக்கப்பட்டது. தமிழர் உள்ளங்கள்தோறும் இல்லங்கள் தோறும் பாவேந்தர் பாடல்கள் சென்று சேர மணிவாசகர் பதிப்பகம் பெரும் திட்டம் வகுத்து பிழையற்ற அழகிய செம்பதிப்புகளாக மிகக் குறைந்த விலையில் வெளியிட்டு மொழிக்கும் பாவேந்தருக்கும் பெருமை சேர்க்கிறது.

# இயற்கைப் பகுதி

## காலை

கொக்கோ கோகோ என இனிமையின்
குரல் மிகுத்திடக் கூவல்– செவிக்
குளிர்தரும் அதிகாலை என்பதைக்
குறித்திடும் மணிச் சேவல்!

திக்கார்ந்திடும் இருள் விலகிடும்
சிறு பறவைகள் கூவும்– நல்ல
திரைக்கடல் மிசை எழுந்திடும் முனம்
செழுங் கதிரொளி தூவும்!

தக்கோர் கண்ணில் தெளியுளமதிற்
தகு புதுமைகள் உதிக்கும்– நல்ல
தமிழ்க் கவிதைகள் உழுபவர் சொல்ல
எருதுகள் சதி மிதிக்கும்!

செக்காடுவார் திகு திடு கிறு
கீச்சென வருஞ் சத்தம்!– நல்ல
சேரியின் துணை கோரி அங்குள
ஊர் முழுமையும் கத்தும்.

கண்மாமலர் விரிந்திடும், பெண்கள்
கரம் கதவுகள் திறக்கும் – மிகக்
கருத்துடனவர் முன்றில் விளக்கக்
காற் சிலம்பொலி பறக்கும்!

உண்ணா துண்டு துயில் கிடந்திடும்
உயிர் நிகர்த்த கு ழந்தை– விரைந்
தோடித் தனது பாடம்படிக்க
உவகை கொண்டிடும் தந்தை.

விண்ணேறிடும் பகலவன் கதிர்!
விளங்குறும் திசை முகமே!- தகு
வினை தொடங்குது கிடுகிடுவென
விரி மனித ச முகமே!

❀ ❀ ❀

# அந்திப் போது!

அந்தியும் மேற்கில் மறைந்தாள் – அவள்
ஆடை யெனும்கரு வானம்,
எந்தத் திசையிலும் காற்றில் – பறந்
தேறிடும் காட்சியும் கண்டீர்!
சிந்திய முத்து வடந்தான் – ஒளி
சேர்ந்திடும் நட்சத் திரங்கள்!
சிந்தையிற் கோபம் அடைந்தாள் – அந்தி
இன்முகம் இங்குத் திருப்பாள்.

பாடுங் கடற்பெரு வேந்தன் – தன்
பங்கில் இருந்தன னேனும்,
நாடும் உளத்தினில் வேறு – தனி
நங்கையை எண்ணிட லானான்.
ஏடு திருப்பிப் படித்தால் – அந்தி
எப்படி ஒப்பு வள் கண்டீர்!
ஆடி நடந்துவந் திட்டாள் – அதோ
அந்தியின் நேர்சக்க ளத்தி!

கன்னங் கறுத்தநற் கூந்தல் – அந்தி
கட்டவி ழநடந் தாளே!
சென்னி புனைந்த கிரீடம் – மணி
சிந்திட ஓடிவிட் டானே!
கன்னி யுளம்வெறுத் தாளே – கடற்
காதலன் போக்கினை எண்ணி!
என்ன உரைப்பினும் கேளாள் – அந்தி
யின்முகம் கீழ்த்திசை காட்டாள்!

ஏடி ஒளிமுகத் தாளே! – அந்தி!
என்னை மறந்தனை என்றே
கோடி முறைஅழைத் திட்டான் – உளம்
கொந்தளிப் புற்றுப் புரண்டான்!

வாடிய அந்தி நடந்த – அந்த
மார்க்கத்தி லேவிழி போக்கிப்,
பீடழிந் தான் அந்த நேரம் – ஒரு
பெண்வந்து பின்புறம் நின்றாள்!

வந்திடும் சோதி நிலாவைக் – கடல்
வாரி அணைத்தனன் கண்டீர்!
அந்தி பிரிந்ததி னாலே – கடல்
ஆகம் இருண்டது; பின்னை
விந்தை நிலாவரப் பெற்றான் – கடல்
மேனியெ லாம் ஒளி பெற்றான்!
சிந்தையை அள்ளுது கண்டீர்! – அங்குச்
சீதக் கடல்மதிச் சேர்க்கை!

❀ ❋ ❀

# நிலாப் பாட்டு

நிலவே நிலவே, எங்கெங்குப் போனாய்?
உலக முற்றும் உலவப் போனேன்.

உலாவல் எதற்கு விலாசத் தீபமே?
காடும், மலையும், மனிதரும் காண.

காண்ப தெதற்கு களிக்கும் பூவே?
சூரிய வெப்பம் நீங்கிக் குளிர.

குளிர்ச்சி எதற்கு வெளிச்சப் பொருளே?
செய்யுந் தொழிலிற் சித்தங் களிக்க.

சித்தங் களிக்கச் செய்வ தெதற்கு?
நித்தமும் நாட்டை நிலையில் உயர்த்த.

நாட்டை உயர்த்தும் நாட்டம் எதற்கு?
வீட்டைச் சுரண்டும் அடிமை விலக்க.

அடிமை விலக்கும் அதுதான் எதற்கு?
கொடுமை தவிர்த்துக் குலத்தைக் காக்க.

குலத்தைக் காக்கும் குறிதான் எதற்கு?
நிலத்துச் சண்டையைச் சாந்தியில் நிறுத்த.

சாந்தி ஆக்கும் அதுதான் எதற்கோ?
ஏய்ந்திடும் உயிரெலாம் இன்பமாய் இருக்க.

பதந்தனில் இன்ப வாழ்வுதான் எதற்கோ?
சுதந்தர முடியின் சுகநிலை காணவே!

★ ☆ ★

# சோலை

விரைமலர்த் தேன்வண் டெல்லாம்
வீணையை மிழற்ற, ஆங்கே
மரங்கொத்திப் புட்கள் தாளம்
வகைப்படுத் திடத்த டாகக்
கரையினில் அலைக்க ரங்கள்
கவின்மிரு தங்கம் ஆர்ப்பக்,
கருங்குயில் பாடத் தோகைக்
கணிகை நின்றாடும் சோலை!

வானவில் ஏந்தல் கண்டு
மாந்தளிர் மெய்சி வக்கத்,
தேனுந்தும் மலர்க்கு லங்கள்
செம்மக ரந்தம் தூவ,
ஆநந்தத் தென்றல் மெல்ல
ஆலவட் டம்பி டிக்க
வானவில் மறைய, மாலை
மல்லிகை சிரிக்கும் சோலை!

நெல்லியும் கமுகும் ஆலும்
நெடுங்கிளைக் கரம்வ ளைத்துச்
சொல்லுக இரண்டி லொன்று
தொட்டிழுத் திடுவோம் என்ன,
நல்ல மாதுளம் நடுங்கும்;
நறுவிளா நடுங்கும்; கொய்யா
வல்லிஎன் மார்போ கொய்யாக்
கனியென வழுத்தும் சோலை!

மாணிக்க அலகிற் கொஞ்சும்
மரகதக் கிள்ளைக் கூட்டம்
ஆணிப்பொன் னூச லாட,
அணிக்கிளை அசைக்கும் தென்றல்!
தூணிட்ட பச்சைப் பந்தல்

சூழ்கிளை மஞ்சத் தின்மேல்
ஆணொடு பெண்சிட் டின்பம்
மொண்டுமொண் டருந்தும் சோலை!

பறிபடாப் பசும்புற் பூமி
பட்டுத் தைத்திட்ட பெட்டி
திறந்தஅப் பெட்டி யெங்கும்
சேர்பனி வயிரக் குப்பை!
அறைமணிக் குப்பை யெல்லாம்
அருக்கனின் ஒளிப்பெ ருக்கம்!
பறிபடாப் புற்கள் கண்ணைப்
பறித்திடச் சிறக்கும் சோலை!

★ ☆ ★

# குவட்டாவில் கூட்டக்கொலை

எந்த நிமிஷத்திலும்-சாதல்
ஏற்படக் காரணங்கள்
ஐந்து லக்ஷம்உளவாம்-இதில்
ஐயமுற வேண்டாம்.
இந்த உலகத்திலே-"நீ
இருத்தல்" என்பதெலாம்
வந்த விபத்துனையே-கொஞ்சம்
மறந்த காரணத்தால்!

வானமும் மண்ணகமும்-உண்டு;
மத்தியில் நீ யிருந்தாய்.
வானிடைக் கோடிவகை-"நிலை
மாற்றம்" நிகழ்வதுண்டாம்.
ஆனஇம் மண்ணகத்தே-பதி
னாயிரம் உற்பாதம்!
பானை வெடிக்கையிலே-அதிற்
பருக்கை தப்புவதோ!

நாளைய காலையிலே-இந்த
ஞாலம் உடைவதெனில்,
வேளை அறிந்ததனை-நீ
விலக்கல் சாத்தியமோ?
ஆளழிக்கும் விபத்தோ-முன்
னறிக்கை செய்வதில்லை.
தூளிபடும் புவிதான்-இயற்கை
சுண்டுவிரல் அசைத்தால்!

மானிடர் மானிடரைக்-கொல்லும்
வம்பினை மானிடர்கள்
ஆனபடி முயன்றால்-பகை
அத்தனையும் விலகும்.

மானிடன் கொன்றிடுவான்—எனில்
மந்த மனிதனைத்தான்!
மானிடம் மானிடனின்—உயிர்
மாய்ப்பதும் மிக்கருமை!

நல்ல குவட்டாவில்—உன்
நல்ல உறவினர்கள்
இல்லம் தெருக்களுடன்—அவர்
இல்லை எனக்கேட்டோம்.
சொல்லத் துடிக்குதடா—உடல்!
தூய வடநாட்டார்
அல்லற் பெருஞ்சாவின்—வயிற்றில்
அகப்பட் டறைப் பட்டார்.

ஆகும் ஐம்பத்தாறா—யிரம்
அன்பு மனிதர்களைப்
பூகம்ப உற்பாதம்—மண்ணிற்
போட்டு வதைத்ததுவாம்!
சோகம் புலம்புமடா—இந்தத்
தொல்லைச் செயல்கண்டால்!
ஊகத்தில் இக்கோரம்—தோன்றி
உள்ளம் அறுக்குதடா!

மாடம் இடிந்தனவாம்!—அவை
மண்ணிற் புதைந்தனவாம்!
ஆடும் தரையோடும்—மெத்தை
அடுக் கொடிந்தனவாம்!
கூடத்து மக்களெலாம்—எழிற்
கொஞ்சிப் பழம்போலே,
வாட நசுங்கினராம்—ரத்த
வாடை எடுத்ததுவாம்!

சிற்றெறும்புக் கடிக்கே-அழும்
திவ்விய அன்புடையார்!
வெற்றிக் குவட்டாவை-இயற்கை
வேரறுக்கும் சமயம்
பெற்ற பிள்ளை துடிப்பும்-பிள்ளை
பேணும் அன்னை துடிப்பும்,
எண்ணச் சகிக்கவில்லை!-நகர்
எங்கும் சுடுகாடாம்!
கண்டவர் செத்திருப்பார்-இந்தக்
கஷ்ட நிஷ்டூரமெலாம்!
அண்டை அயலிருப்பார்-அவர்
அன்பினிற் செத்திருப்பார்!
எண்டிசை கேட்டிருக்கும்-இதை!
ஏக்கம் அடைந்திருக்கும்.
இன்றிரவே நமது-நிலைமை
ஏதுகொல் என்றெண்ணும்!
தின்று படுக்கும்முனம்-உயிர்
தீரும்என நடுங்கும்!
நன்று புவிவாழ்வு-மிக
நன்று மிகநன்று!
மென்று விழுங்கும் "புலிப்-பெருவாய்"
மேதினிஎன்று பொருள்.
தம்பிஉனக் குரைப்பேன்-நீ
சஞ்சலம் கொள்ளுகின்றாய்!
வெம்புகின்றாய் உளந்தான்-இந்த
வேதனைச் செய்தியினால்!
அம்பு தொடுக்காமல்-கா
லாட்படை ஏவாமல்,
கும்பலிற் சாகும்வகை- இயற்கை
கோடிவகை புரியும்!

பூகம்ப லோகத்திலே-தீயும்
புனலும் வாழ்புவியில்,
வேகும் எரிமலைகள்—நல்ல
வேட்டையிடும் புவியில்.
நோகும்படி தோன்றிக்-கொல்லும்
நோய்கள் ஒருகோடி
ஆகுமிப் பூமியிலே—நீ
அன்புறு வாழக்கையுற,

மன மிருந்தாலோ-ஒரு
மருந்துனக் களிப்பேன்.
தினமிரு வேளை—அதைத்
தின்றுவர வேண்டும்.
எனை வெறுக்காதே-மருந்
தின்னதெனச் சொல்வேன்.
தினையள வேனும்—அதைச்
சீயென் றொதுக்காதே!

சாவது நிச்சயமாம்—நான்
சாவது நிச்சயமாம்
சாவது நிச்சயமாம்—என்ற
சத்திய வார்த்தையினைக்
கூவு தம்பிகூவு!-இந்தக்
குவலயம் கேட்கக்
கூவுக லக்ஷமுறை!-உன்
கொச்சை மனந்தெளியும்!

அந்தத் தெளிவினிலே—உனக்
காண்மை உதித்துவிடும்!
சொந்த உலகினிலே-என்றும்
தொல்லை விளைத்துவரும்
எந்த மனிதனையும்-நீ
ஏறிக் கலக்கிடுவாய்!

சந்ததம் இன்பத்திலே–புவி
சாரும் வகைபுரிவாய்!

மக்களுக் கிங்குழைப்பாய்–இங்கு
வாழ்ந்திடும் நாட்களெலாம்,
தக்கன செய்வதற்கே–மனம்
சலித்தல் விட்டொழிப்பாய்!
அக்கினி மத்தியிலும்–நீ
அஞ்சுதல் நீக்கிடுவாய்!
புக்க மனிதரெலாம்–ஒற்றைப்
போகமுறை உழைப்பாய்!

★ ☆ ★

# தமிழகப் பகுதி

## தமிழ்த் தொண்டு

இயற்கை அன்னை அருளிய இன்தமிழ்!
அயல்மொழி வேண்டா ஆர்எழில் சேர்தமிழ் !
நிறைதமிழ்! இந்நாள் நெடுநிலம் முழுதும்
குறைவில தென்று குறிக்கும் தனித்தமிழ்!
தமிழர் வாழ்வின் தனிப்பெரு மைக்கும்
அமைந்த சான்றாம் அமுதுநேர் செந்தமிழ்
அந்த நாளில் அறிவுசால் புலவர்
எந்தநாள் தோன்றிய தோஎனும் பழந்தமிழ்!
தமிழை அழித்தல் தமிழரை அழிப்பதென்று
இமையாது முயன்ற அயலவர் எதிரில்,
இறவாது நிற்கும் ஏற்றத் தமிழின்
பெருநிலை எண்ணுக தமிழ்ப்பெரு மக்களே!
அருஞ்செல் வர்கள் அன்று தொடங்கி
இன்று வரைக்கும் ஈந்து வந்துள்ள
பொன்றா ஆதரவு-அன்றோ காரணம்?
அயல்மொழி எல்லாம் அண்டையில், கண்ணெதிர்
வியக்கு முறையில் மேன்மை பெற்றன;
என்ன முயற்சி! எத்தனை ஆர்வம்!
இன்ன வண்ணம் இருக்கையில், நம்மவர்
தமிழிடம் காட்டும் தயவு போதுமா?
தமிழ்த்தாய் பூசை போதுமா? சாற்றுக!
"தமிழர் பொருளெலாம் தமிழுக்குத் தந்தார்"
"தமிழை யுயர்த்தினர் தாமுயர் வுற்றார்"
என்றசொல் நாட்டினால், இறவா நற்புகழ்
நன்று வாய்ந்திடும் என்ற நடுக்கமோ?

தமிழின் தொண்டு தரித்திர வயிற்றுக்கு-
அமிழ்தம் அன்றோ அண்ணன் மாரே!

✧ ☆ ✧

ஆவன தமிழுக் காற்றுதல் சிறிதே.
ஈவது சிறிதே இன்ப மொழிக்கு!
வருத்தச் சேதி இஃதொன்று மட்டுமா?
ஒருவர் ஒன்று தமிழ்நலம் உன்னி
இயற்றமுன் வந்திடில், இடையூறு பற்பல
இயற்றமுன் வருவதை என்ன என்பது!

★ ★ ★

சேர்ந்து தொண்டாற்றுதல் சிறப்பா? அன்றிக்
காய்ந்தும், முணுத்துக் கசந்தும் கலகம்
செய்தும் திரிதல் சிறப்பா? செப்புக!
குள்ள நெஞ்சினர் கொடுமை செய்வதைத்
தெள்ளிய நெஞ்சினர் தீர்த்தும், தமிழில்
அன்பிலாத் தமிழரை அன்பில் தோய்த்தும்,
தென்பா லெழுந்த தீந்தமிழ்ச் சுடரை
வானிடை எழுமோர் வண்மைச் சுடராய்ச்
செய்யமுன் வருக தமிழரே,
உய்ய நம்மவர்க்கிங் குறுதுணை அஃதே!

★ ☆ ★

# நமது நாடகம் சினிமா

சீரியநற் கொள்கையினை எடுத்துக் காட்டச்
சினிமாக்கள் நாடகங்கள் நடத்த வேண்டும்
கோரிக்கை பணம்ஒன்றே என்று சொன்னால்
கொடுமைஇதை விடவேறே என்ன வேண்டும்?
பாராத காட்சியெலாம் பார்ப்ப தற்கும்,
பழமையினை நீக்கிநலம் சேர்ப்ப தற்கும்
ஆராய்ந்து மேனாட்டார் நாட கங்கள்
அமைக்கின்றார் முன்னேற்றம் அடைகின் றார்கள்.

ஒருநாட்டின் வேரிலுள்ள தீ மை நீக்கி
உட்புறத்தில் புத்தொளியைச் சேர்ப்ப தற்கும்,
பெருநாட்கள் முயன்றாலும் முடியா ஒன்றைப்
பிடித்தபிடி யில்முடித்துத் தீர்ப்ப தற்கும்,
பெருநோக்கம் பெருவாழ்வு கூட்டு தற்கும்,
பிறநாட்டார் நாடகங்கள் செய்வார்! என்றன்
திருநாட்டில் பயனற்ற நாட கங்கள்
சினிமாக்கள் தமிழர்களைப் பின்னே தள்ளும்!

தமிழ்நாட்டில் நாடகத்தால் சம்பா திப்போர்
தமிழ்ப்பாஷை யின்பகைவர்; கொள்கை யற்றோர்;
இமயமலை யவ்வளவு சுயந லத்தார்;
இதம்அகிதம் சிறிதேனும் அறியா மக்கள்!
"தமைக்காக்க! பிறர்நலமும் காக்க" என்னும்
சகஜகுண மேனுமுண்டா? இல்லை. இந்த
அமானிகள்பால் சினிமாக்கள் நாட கங்கள்
அடிமையுற்றுக் கிடக்குமட்டும் நன்மை யில்லை.

முன்னேற்றம் கோருகின்ற இற்றை நாளில்
"மூளிசெயல் தாங்காத நல்ல தங்கை
தன்னேழு பிள்ளைகளைக் கிணற்றில் போட்ட
சரிதத்தைக் காட்டுகின்றார் சினிமாக் காரர்!

இந்நிலையில் நாடகத்தின் தமிழோ, "காதை
இருகையால் மூடிக்கொள்" என்று சொல்லும்.
தென்னாட்டின் நிலைநினைத்தால் வருந்தும் உள்ளம்!
செந்தமிழின் நிலைநினைத்தால் உளம்வெ டிக்கும்!

# நல்வாழ்வு!

**(மாமயிலேறிநீ வா மகாநுபாவா என்ற மெட்டு)**

***பல்லவி***

நோயினைப் போய் அழிப்பாய்
நூறாண்டு வாழ்வாய்! (நோ)

***சரணம்***

ஆயநன் னெஞ்சில் வேண்டும்நல் வீரம்
தேயத்தில் தேகத்தில் வேண்டும்சுகா தாரம் (நோ)

அசுத்தமும் இருட்டும் புறத்தும் நல்லகத்தும்
அகற்றுக நீ தமிழா ஆநந்தம் உனைநத்தும் (நோ)

வாழ்க்கையின் நடுவே வரஎண்ணும் சாவைப்
போக்கிட நோய்களில் அசுத்தத்தில்"தீ" வை! (நோ)

அயர்வினில் தொடரும் துயரெனும் சேதி
அறிவுலகினில் இல்லை; ஏறடா அதன் மீதில்! (நோ)

# நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்

காலை விழித்தெழுந்தாள் கைம்மலரால் கண்துடைத் (தாள்!
கோல மலர்கமழும் கூந்தல் திருத்தினாள்.

காந்தி முகம்கழுவிக் கைவிளக்கை ஏற்றி, மிகு
சாந்த உரைபேசிப் பிள்ளைகளைத் தானெழுப்பி,

வீணை எடுத்தாள்! விளைத்தாள் அமுதத்தை!
ஆணழகன் தன்நாதன் அவ்வமுதம் கேட்டெழுந்தான்!

காதற் கணவன், கனியன்புப் பிள்ளைகள்
சோதித் தமிழ்க்கவிதை சுருதியொடு கலக்கப்

பாடினார்! பாடிப் பனிக்காலைப் போதுக்குச்
சூடிஅழைக்கச், சுடரும் கிழக்கினிலே

செம்மை ஒளியிற் சிரித்துத் தலைநிமிர்ந்தான்!
அம்மை குடித்தனத்தை ஆளும் அரசியிவள்

பிள்ளைகளைக் கூட்டிப்போய்ப் பீடத்தி லேயமைத்துப்
பள்ளிக்கு வேண்டியநற் பாடங்கள் சொல்லிவிட்டு,

நல்ல கதையுரைத்து ஞாலப் புதுமைகளைச்
சொல்லி மகிழ்வித்தாள். தோயன்பு நாதன்முதல்

எல்லாரும் இன்ப உணவுண்டார். மக்களெலாம்
கல்விச்சாலை செல்லக் கட்டும்உடைப் பொத்தலெல்லாம்

இல்லக் கிழத்தி எழில்தையற் காரியாய்த்
தைத்துடுத்தி விட்டாள்; தனது கணவனிடம்
அத்தினத்தில் ஆனபல ஆலோசனை பேசி

நாதன் வெளிச்செல்ல நங்கை இனிதிருந்த
போதில், வெளியூர்ப் புறத்தி லிருந்துதன்

வீட்டுக்கு வந்த விருந்தாளி, வீதியிலே
போட்டிருந்த கல்தடுக்கப் பொத்தென்று வீழ்ந்ததனால்

மண்டை யுடைந்துவந்தான்; வஞ்சி இரக்கத்தால்
அண்டையிலே கட்டில் அதில்வளர்த்தி நற்சிகிச்சை

தக்கபடி புரிந்தாள். தன்நாதன் வீடுவந்தான்.
ஒக்க இருந்தான். உடலும் நலமாச்சு.

நல்ல சுகாதாரம் நாடிச் சமைத்திருந்த
பல்லுணவும் இட்டாள். பகல்கணக்கும் தான்எழுதிச்

சித்திரத்தில் மக்கள் திருந்தப் படமெழுதி
வைத்திருந்த நூலை மணவாள னோடிருந்து

வாசித்தாள். நல்ல வடிவழகன் பேச்சமுதை
ஆசித்தாள், இன்பம் அடைந்தாள். சிறிதயர்ந்தாள்.

பக்கத்து வீட்டுப் பருவதத்தாள் தான்வந்து
சொக்கர் திருவிழாச் சோபிதத்தைச் சொல்லி,

வருவாய்நாம் போய்வருவோம்; மாலை திரும்பி
வருவோம் என்றாள்! இந்த வார்த்தைகளைக் கேட்ட

இல்லக் கிழத்தியவள் சும்மா இருந்துவிட்டாள்.
நல்ல விழாவைத்தன் நாவால் மறுப்பாளா?

வந்த விருந்தாளி பருவதத்தின் வார்த்தைக்குத்
தந்த பதில் இதுவாம்-"தையலரே கேளுங்கள்!

சங்கீதக் கோகிலத்தைத்-தாவும் கிளையினின்று
அங்கு விழாவுக் கழைத்தால் வருவதுண்டோ?

மக்களுக்கு வாத்தியென வாய்ந்த மருக்கொழுந்தைக்
கக்கும் அனலில் கசக்க அழைப்பீரோ?

தையற் றொழில்அன்னம் தாமரைப்பூ வைமறந்து
வெய்யிற் சுரத்திடையே வீழ்த்த அழைப்பீரோ?

வீட்டுக் கணக்கெழுதும் வித்தகத்தை அவ்விழவில்
போட்டுக் குலைக்கப் பொறாமை உமக்காமோ?

காவியங்கள் கற்றுக் கவிசெய்து நல்லநல்ல
ஓவியங்கள் தீட்டும் உயர்புலமைத் தேவியினை

வம்புக் கிழுக்க வசமாமோ சொல்லிடுவீர்?
அம்மையீர், நல்ல அறிவும் திருவுமுறும்

சீ மாட்டி தன்னைத், திருவிளக்கைக் கல்வியெனும்
மாமேட்டில் வீற்றிருக்கும் மங்கைக் கரசிதனைச்

சொந்தக் கணவனுடன் சேய்கள் தொடர்பறவே
எந்நிமிஷமும் பிரிதல் ஏற்றதல்ல என்றுரைப்பேன்.

நிர்மலமாங் கல்வி நிறைந்தாள் இருந்தகுடி
சர்வகலா சாலை எனத்தகுமே! அவ்வம்மை

ஊமைஎன இருந்தாள் உங்கள் அழைப்புக்கே!
தீமை புரியாதீர்" என்று தெரிவித்தான்!

இல்லக் கிழத்தி எதிரிருந்த மங்கைதனை
முல்லை மலர்ந்த சிரித்த முகங்காட்டி,

தோழி, விழாவுக் கழைத்தாய் அதுவேண்டாம்;
வாழி உலகென்றாள் வாய்ந்து.

❄ ❄ ❄

# தமிழர் எழுச்சி!

உயர்தமிழ் உயர்நடை உயர்தனி வீரம்
இங்கிவை தமிழரின் உடைமை!
அயர்வுகள் தீர்ந்தன புதுமையில் உலகை
ஆள்வது தமிழர்கள் கடமை!
புயல்நிகர் பகைமையும் வேரோடு மாளும்
தமிழர்கள் சமரிடைப் புகுந்தால்!
வெயில்முகம் சுளித்தால் அகிலம் தூளாம்
மேன்மையை முழக்குக முரசே!

பழமையில் இங்குள அன்புறு காதற்
பயனுறும் அகப்பொருள் காப்போம்!
அழகிய தமிழ்நடை யாற்புதி யனவாய்
ஆயிரம் கலைநூல் சேர்ப்போம்!
அழுதிட ஒருவன்மற் றொருவனை யேய்க்கும்
அதருமம் அனைத்தையும் மாய்ப்போம்!
முழுதுல கப்பயன் உலகினர் சமம்பெற
அன்பினில் மனிதரைத் தோய்ப்போம்!

முழங்குக எங்கணும் முழக்குக முரசே
முழக்குக தமிழர்கள் பெருமை!
வழங்கிடும் அங்கையர் வாளுயர் தோளினர்
வாய்மையின் வாழ்பவர் தமிழர்!
எழுந்துள வீரம் தமிழரின் மூச்சில்
எழுந்தது வாமென முழக்கே!
அழுந்துதல் இல்லை உலகுள்ள வரைக்கும்
அன்புத் தமிழர்கள் வாழ்வு!

மணிமுடி மறவர்கள் முழுதுணர் மேலோர்
மாபெரும் கவிஞர்கள் கூட்டம்,
அணிமுடி காதல் மகளிர்கள் கூட்டம்
ஆவது தமிழர்கள் ஈட்டம்!

பணிகுதல் இல்லை அஞ்சுதல் இல்லை
பாய்ந்திடும் ஒற்றுமை யாலே!
தணியாக் காதல் நிறைவா மின்பம்
தமிழர்க் கிப்புவி மேலே!

☆ ☆ ☆

## உலக சமாதானம்

# உலகப் பொதுச்சேனை

### படை நடத்தல்

நானிலத்தின் மேனிலைக்குச்
சேனை கூட்டினோம்!-பொதுச்
சேனை கூட்டினோம்-வெறி
நாய்கள்ஒக்கப் போர்தொடுக்கும்
ஈனம் ஓட்டினோம்!-கெட்ட
ஈனம் ஓட்டினோம்.

தேனடைக்குள் ஈக்கள்ஒப்பர்
பூதலத்தினோர்!-இந்தப்
பூதலத்தினோர்-அவர்
சீவனத்திற் பேதம்வைத்துப்
பாழ்படுத்தினார்! -துஷ்டர்
பாழ்படுத்தினார்.

ஆனதுஷ்டர் தீயதன்மை
சாகடிக்கும் நாள்-முற்றும்
சாகடிக்கும் நாள்-இது
வாகும்என்று தீவிரத்தில்
வாளெடுக்கும் தோள்!-கூர்
வாளெடுக்கும் தோள்!

மேனிலைக்கண் மாநிலத்தை
ஏற்றுவிப்பிரே-விரைந்
தேற்றுவிப்பீரே-நீர்
மேல் நடப்பீர்! மேல் நடப்பீர்!!
மேல் நடப்பிரே!!!

# உலக முன்னேற்றம்

உலகமே உயர்வடைவாய்!
உள்ளவர்க் கெல்லாம் நீயேதாய்!
        நலந்தரும் சமத்வம்
        நாடுதல் மகத்வம்
நண்ணுவாய் சுதந்தரத்வம்! (உலக)

கலகமேன்? சண்டைகளேன்?
கருத்தெலாம் பேதம் கொள்வதேன்?
        கலன்செல்லும் பாதையின்
        காரிருள் வெளிக்குக்
கல்வியே சுடர் விளக்கு! (உலக)

❀ ✿ ❀

# கொடை வாழ்க!

## எக்காளக் குயில்

### வெண்பா

நின்றசெங் காந்தட்பூ நேரிற்கை யேந்தநெடுங்
கொன்றை மலர்ப்பொன்னைக் கொட்டுகின்றாள்–என்றே
அடைகுயில்கள் எக்காளம் ஆர்த்தனவே மண்ணிற்
கொடைவாழ்க என்று குறித்து.

* * *

## காதற் பகுதி

# கண்டதும் காதல்!

**(வண்ணம்)**

ஸ்ரீமதிஇவ ளார்?உலகிடை மானிடமதி லேயிவள்?ஒரு
சேலிணையினை நேரிருவிழி, கோகனகவி' நோதஅதரம்,
மாமதிநிகர் ஓரிளமுகம், வானுறுமழை தானிருள்குழல்,
வாழ்மதுகரம் ஊதிடுமலர் சூடியமுடி யோடிவளிரு
மத்தக மொத்த தனத்தொடு சித்தமி
னித்திட நிற்பது மிக்கவும் அற்புதம்!
மலர்வாய் திறந்தொரு வார்த்தை சொல்லாளோ?

தோய்மதுமலர் மாலையைநிகர் ஆகியஒரு தேகவனிதை
தீவிரநடம் ஆடியமயிலே எனுமொரு சாயலினோடு
மாசறுகலை மானெனமருள் வாளவள்நடை யோஅனநடை
வாழுலகினி லேஇவளரு ளாலதிசுக மேபெருகிடும்!
வைத்திடு புத்தமு தத்தையெ டுக்கம
றுத்திடல் மெத்தவ ருத்தமெ னக்குறும்!
மதுவோடையை மொண்டுண வாக நல்காளோ?

மாமயலெனும் ஓர்அனலிடை யேஎனதுளம் நோயடைவதை
மாதிவளறி யாள்இதைஎவர் போயவளிட மேபுகலுவர்?
ஆம்அவள்தரு வாயிதழமு தேஇகத்துறு மாஅவுஷதம்!
அற்புத சித்திர சிற்பக் கலைக்கொரி
லக்கியம் வைத்தசி றப்புமி குத்திடும்
அழகாகிய வஞ்சியென் வீட்டை நண்ணாளோ?

நாமுறுதமிழ் நாடெனுமொரு தாயுறுபுக ழோ! இனிதென
நாவலர்களு மேதுதிநிதம் ஓதிடுதமி ழோ! நவநிதி
யோ! முழுநில வோ! கதிரவ னோ! கவிதையி லேவருசுவை
யோ! இதுகன வோபுதுயுக மோ! வடிவழ கே வடிரசம்
மக்கள் உயிர்க்குறு நற்பதம் இப்படி
வைத்த தெனச்சொல விட்டசு கக்கடல்!
மனமே இனும்பொறு வீழ்ச்சி கொள்ளாதே!

* * *

# கண்டதும் காதல்

இராகம்: அடாணா அடதாளம்.

**பல்லவி**

களிப்பில் ஆடும் கான மயிலோ
காதாரும் பண் பாடும் குயிலோ? (களிப்)

**அனுபல்லவி**

துளிக்கும் மது மலரின் தேகம்
சுகம் தரும் இவள் அளிக்கும் போகம்! (களிப்)

**சரணம்**

பளிக்குமேனி கண்டு மனந்தத் தளிக்குது
உடல் கொப்பளிக்குதே!
ஒளிக்குதே இம் முகவிலாசம் உளத்தில்
மோகம் தெளிக்குதே!
வளர்க்கா தெழில் வளர்ந்த ரூபம்
வையம் விளங்க ஏற்றும் தீபம்! (களிப்)

கலைத்துக் கலைத்து வரைந்த சித்திரமோ
கவினுறும் விழி வேலோ!
ஒலிக்கெலாம் உயிர் தரும் இவள் மொழி
இனிப்புச் சேர்த்திட்ட பாலோ!
தலைக்கேறுதே கொண்ட மோகம்
தகிக்குதே இதென்ன வேகம்! (களிப்)

☆ ☆ ☆

# நாணிக்கண் புதைத்தல்

## தலைவன் கூற்று

### இராகம்: கமாஸ்

**(ஏனிந்தப்படி மனம் கலங்கலானீர் மன்னா என்ற மெட்டிற் சிறிது பேதம்)**

*தாமரை முகத்தினைத் தளிர்க்கரம் மறைத்ததடி–*
*இளந்தையலே!*
*பூமது வருந்திடும் புதுவண்டுபோல் மனம்*
*புழுங்குதடி மயிலே, வழங்கும் தமிழ்க்குயிலே!*
*(தாமரை)*

*விழிமலர் மறைத்ததில் கழிமயல் ஆகுதடி–*
*இளந்தையலே!*
*பிழிந்த அமுதமதைப் பிசைந்த கனிரசத்தை*
*விழுந்து புசித்துவிடின் ஒழிந்து விடுமெனவே*
*(தாமரை)*

*நாணப்படுவதிங்கு நாணயமில்லையடி–இளந்தையலே!*
*காணப்படும் நிலவைக் கரம்பொத்தி விடுவதில்*
*ஆணழகன் சகித்தல் அருமை அருமையடி!*
*(தாமரை)*

*மலர்க்கொடி விலக்கடி மதிமுகம் மறைத்தகரம்–*
*இளந்தையலே!*
*இலக்குத் தவறுதடி என்முகம் உன்முகம்*
*இணைத்திணைத் திழுத்திழுத்தணைத்தணைத் தழுதளி!*
*(தாமரை)*

☆ ☆ ☆

# தலைவன், தலைவி தந்தசுகம் நினைந்துருகல்

(ஸ்ருங்காரலகரி என்ற மெட்டு)

*பல்லவி*

செந்தேனோ தமிழோ அவளுதவிய சுகம்!

*அநுபல்லவி*

முந்தோர் நாள் தானே வந்தெதிர்
குளிர் சோலையில் முழு நிலவினில்
கொண்ட காதல் மிகவாகிச் சிலீரெனச்

(சிட்டா ஸ்வரத்திற்கு)

கோ–கனகவி தழ்குவிய முகமே என
தொருமுக மிசையுற, மலருடல் எனதொரு
புளகமெய் தனிலுற இருவ ரொருவ ராக ஆவலொடு
கொஞ்சித்தந்த வஞ்சி முத்தம்
கொஞ்சத்தினில் நெஞ்சைவிட்டு
நிமிஷமும் அரை நிமிஷமும்
விலகுதல் அருமை விரைவினில் அவள்பிரி
வினைமனது பொறுத்திடுவது சகம் வெறுப்பது வாகும் –
மலர்ச் (செந்)

*சரணம்*

சுந்தராங்கி அமுதங் குழல் போல் மொழியாள்
சுகுணாலயம் அன்னவள்!
எந்த வனிதை அவளோ டிணைபெற வருவாள்?
கந்தக் களப உடலாள்! அதிசோபித
கண்ய மான அதி புண்யவதி சுநிதி! (செந்)

## நகைச்சுவைப் பகுதி

# பறக்கும் மிளகு!

பூமியில் மிளகு புள்போல் பறக்குமா?
புதுவை மிளகோ புள்ளாய்ப் பறக்கும்!
சீர்புதுச் சேரியில் தெரிந்த வீடு
சென்றேன் சென்ற மாதக் கடைசியில்!
கூடம் நிறையக் கொட்டி யிருந்த
கொட்டை மிளகைக் கூட்டி வார
எண்ணினேன், வீட்டார் இல்லை யாதால்!
எழுந்து துடைப்பம் எடுத்து நாட்டினேன்.
பூமியில் மிளகு புள்போற் பறக்குமா?
புதுவை மிளகு புள்ளாய்ப் பறந்ததே!
எனக்கும் ஆயுள் எண்பது முடிந்ததாம்;
இந்த அதிசயம் எங்கும் கண்டிலேன்!
பூமியில் துடைப்பம் போட்டு நின்றேன்;
போன மிளகு பூமியில் வந்தது!
கூட்டப் போனேன் கூட்டமாய்ப் பறந்தது!
கூட்டாப் போது பூமியில் குந்தும்!
வீட்டுக் காரி வந்து
பாட்டாய்ப் பாடினாள் "ஈ"ப்படுத்து வதையே!

❀ ✿ ❀

# பழைய நினைப்பு

நேற்றவன் சேவகனாம்-இன்று
நீங்கிவந் திட்டாண்டி!
ஏற்றம் இறைத்திடவே-உச்சி
ஏறி மிதித்தாண்டி!
சேற்று நிலத்தினிலே-ஒரு
சின்னஞ்சிறு குறும்பன்
தோற்றி மணியடித்தான்-அந்தத்
தொல்லை மணி ஓசை.

பழைய சேவகனின்-காதிற்
பட்டதும் வண்டி என்றே
பழைய ஞாபகத்தில்-செல்லும்
பாதை குறிப்பதற்கு,
முழுதும் கைதூக்க-அவன்
முக்கரணம் போட்டு
விழுந்துவிட்டாண்டி!-அவன்
வீணிற் கிணற்றினிலே!

# கொசு!

(கும்மி மெட்டு)

கும்ப கோணத்திற்குப் போகவேணும்-அங்குக்
கும்பலிற் சேர்ந்து நடக்கவேணும்
சம்பள வீரர் பிடிக்கவேணும்-அங்குச்
சாவுக்கும் அஞ்சாத தன்மை வேணும்!
கும்பலும் வீரரும் ஏதுக்கென்பீர்?-நல்ல
கும்ப கோணத்தினில் என்ன என்பீர்?
அம்பு பிடித்த கொசுக்கூட்டம்-அங்கே
ஆட்களை அப்படியே புரட்டும்!

☆ ★ ☆

# சென்னையில் வீட்டு வசதி

ஒருவரம் தேவை! உதவுவீர் ஐயா!
திருவ ரங்கப் பெருமாள் நீரே!
சென்னையில் உங்கள் சிறந்த நாமம்
தெரியா தவர்கள் ஒருவரு மில்லை!
பிச்சை எடுத்துப் பிச்சை எடுத்துநான்
பெற்ற பொருளில் மிச்சம் பிடித்துத்
தேன்போட் டுண்ணத் தினையில் ஒருபடி
சேக ரித்தேன்! ஆகையால் அதனை
வீட்டில் வைத்து வெளியிற் சென்று
விடிய வந்து எடுத்துக் கொள்கிறேன்.

வீட்டுக் காரன் கேட்டுத் துடித்தான்!
"பாட்டுப் பாடும் பாராபர வஸ்துவே!
படித்தி னைக்கிட மிருந்தால்,
குடித்தனத் துக்கிடம் கொடுத்திருப் பேனே!"

# ஏற்றப்பாட்டு

1. ஆழ உழுதம்பி அத்தனையும் பொன்னாம்!
   அத்தனையும் பொன்னாம் புத்தம்புது நெல்லாம்!
2. செட்டிமகள் வந்தாள் சிரித்துவிட்டுப் போனாள்!
   சிரித்துவிட்டுப் போனாள் சிறுக்கி துரும்பானாள்!
3. ஆற்று மணல்போலே அள்ளிஅள்ளிப் போட்டாள்
   அத்தனையும் பொன்னாம் அன்புமனத் தாண்டி!
4. கீற்று முடைந்தாளே கிளியலகு வாயாள்
   நேற்றுச் சிறுகுட்டி இன்று பெரிசானாள்!
5. தோட்டங்கொத்தும் வீரன் தொந்தரவு செய்தான்
   தொந்தரவுக் குள்ளே தோழிசுகம் க்ண்டாள்!

✺ ✺ ✺

# அம்மானை ஏசல்

**(எல்லாரும் போனாப்போலே என்ற மெட்டு)**

மந்தை எருமைகளில் வளர்ந்திருந்த காரெருமை
இந்தவிதம் சோமன்கட்டி மாப்பிள்ளையாய் இங்கு வந்தீர்!
மாமா–எங்கள் இன்ப மயிலை நீர் மணக்க லாமா?

ஆந்தை விழிஎன்பதும் அம்மிபோன்ற மூக்கென்பதும்
ஓந்தி முதுகென்பதும் உமக்கமைந்து கிடப்ப தென்ன?
மாமா–எங்கள் ஓவியத்தை நீர் மணக்க லாமா?

கோடாலிப் பல்திறந்து குலுங்கக் குலுங்க நகைக்கையிலே
காடே நடுங்கிடுமே கட்டைவெட்டக் கூடுமென்று!
மாமா–எங்கள் வாசமலரை நீர் மணக்க லாமா?

வெள்ளாப்பம் போலுதடு வெளுத்திருக்கும் வேடிக்கையில்
சொள்ளொழுகிப் பாய்வதுதான் சொகுசு மிகவும்
(சொகுசு சொகுசு!
மாமா–எங்கள் சுந்தரியை நீர் மணக்க லாமா?

ஆனைக்குக் காதில்லையாம் அளிப்பதுண்டோ நீர் இரவல்?
கூன்முதுகின் உச்சியிலே கொக்குக்கழுத்துமுளைத்ததென்ன?
மாமா–எங்கள் கொஞ்சுகிளியை நீர் மணக்க லாமா?

எட்டாள் எடுக்க ஒண்ணா இரும்புப்பிப்பாய் போலுடம்பு
கொட்டாப்புளிக் கால்களால் குள்ளவாத்துப் போல்
(நடப்பீர்!
மாமா–எங்கள் கோகிலத்தை நீர் மணக்க லாமா?

★ ☆ ★

# அண்ணியை ஏசல்

**(கத்தாழம் பழமே உனைநத்தினேன் தினமே என்ற மெட்டு)**

அண்ணி வந்தார்கள்–எங்கள்
    அண்ணாவுக்காக–நல்ல (அண்)

கண்ணாலம் பண்ணியாச்சு
    கழுத்தில் தாலி கட்டியாச்சு!
பிண்ணாக்குச் சேலை பிழியப்
    பெரிய குளமும் சேறாய்ப் போச்சு! (அண்)

எட்டிப் பிடித்திடலாம்
    இரண்டங்குலம் ஜடைநுனிதான்
பட்டி வெள்ளாட்டு வாலைப்
    போல மேலே பார்க்கும்படி! (அண்)

நத்தைப்பல் சொட்டைமூக்கு
    நாவற்பழ மேனியிலே
கத்தாழை நாற்றம் எங்கள்
    கழுத்தை நெட்டித் தள்ளிடுதே! (அண்)

அழுக்குச் சுமந்துசெல்லும்
    அழகு வெள்ளை முகக்குதிரை
வழுக்காது நடப்பதுபோல்
    வாய்த்தநடை என்ன சொல்வேன்! (அண்)

கோல்போல் இடுப்புக்கொரு
    கோல ஒட்டி யாணம்செய்யப்
பேல்கட்டு வாங்கவேண்டும்
    பிரித்துத் தகட்டை எடுக்க வேணும்! (அண்)

பக்குவமாய்ப் பேசும்போது
    பாய்ந்துவரும் குரல் ஒலிதான்,
செக்காடும் சங்கீதமே
    செவியில் வந்து துளைத்திடுதே! (அண்)

## சிறுவர் பகுதி

# கல்வி

(மகாவஜி குணா மாதர வேகமாய் எ-மெ)

(தந்தை தனையனுக்கு உரைத்தல்)

1. கல்வியின் மிக்கதாம் செல்வமொன் றில்லையே
கண்மணி கேளடா. நீ என்றன் சொல்லையே!
செல்வம் பிறர்க்கும் நாம் தந்திடில் தீர்ந்திடும்
கல்வி தருந்தொறும் மிகுதியாய்ச் சேர்ந்திடும். (கல்)

2. கல்வியுள்ளவரே கண்ணுள்ளார் என்னலாம்
கல்வியில்லாதவர்கண் புண்ணென்றே பன்னலாம்
கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை!
கற்பதுவே நாளும் உன் முதற் கடமை. (கல்)

3. இளமையிற் கல்லென இசைக்கும் ஔவையார்
இன்பக் கருத்தை நீ சிந்திப்பாய் செவ்வையாய்!
இளமை கழிந்திடில் ஏறுமோ கல்விதான்?
இப்பொழுதேயுண் இனித்திடும் தேன். (கல்)

☆ ☆ ☆

# பிள்ளைக்கு நீதி

(ஆனந்தக் களிப்பு மெட்டு)

சோம்பிக் கிடப்பது தீமை–நல்ல
தொண்டு செயாது கிடப்பவன் ஆமை!
தேம்பி அழும்பிள்ளைபோலே–பிறர்
தீமையை அஞ்சி நடப்பவன் ஊமை!

புதுமையி லேவிரைந் தோடு–ஒன்று
போனவழிச் செல்லும் மந்தையில் ஆடு !
எதிலும் நிசத்தினைத் தேடு–பொய்
எவர்சொன்ன போதிலும் நீ தள்ளிப் போடு.

தேகத்தி லேவலி வேற்று–உன்
சித்தத்தி லேவரும் அச்சத்தை மாற்று
ஊகத்திலே செயல் ஆற்று!–தினம்
உன்னரு மைத்தமிழ் அன்னையைப் போற்று.

பசிவந்த போதுண வுண்ணு–நீ
பாடிடும் பாட்டினி லேசுவை நண்ணு!
வசித்திடும் நாட்டினை எண்ணு–மிக
வறியவர்க் காம்உப காரங்கள் பண்ணு.

பொய்யுரைப் போன்பயங் காளி–பிறர்
பூமி சுரண்டிடு வோன்பெருச் சாளி
வையக மக்கள் எல்லோரும்– நலம்
வாய்ந்திட எண்ணிடு வோன்அறி வாளி.

❀ ❋ ❀

# வறுமையிற் செம்மை

**(தாய்-மகள் சம்பாஷணை)**

இராகம்: சகானா                                        தாளம் : ஆதி

மகள் சொல்லுகிறாள் :

அம்மாஎன் காதுக்கொரு தோடு-நீ
அவசியம் வாங்கிவந்து போடு !
சும்மா இருக்கமுடி யாது-நான்
சொல்லி விட்டேன் உனக்கிப் போது! (அம்)

தாய் சொல்லுகிறாள் :

காதுக்குக் கம்மல் அழ கன்று-நான்
கழறுவதைக் கவனி நன்று
நீதர் மொழியை வெகு பணிவாய்-நிதம்
நீ கேட்டு வந்து காதில் அணிவாய்! (கா)

மகள் மேலும் சொல்லுகிறாள் :

கைக் கிரண்டு வளையல் வீதம்-நீ
கடன்பட்டுப் போட்டிடினும் போதும் !
பக்கியென் றென்னை யெல் லோரும்-என்
பாடசா லையிற் சொல்ல நேரும்! (கைக்)

தாய் சொல்லும் சமாதானம் :

வாரா விருந்து வந்த வேளையில்-அவர்
மகிழ உபசரித்தல் வளையல்!
ஆராவமுதே மதி துலங்கு-பெண்ணே
அவர் சொல்வ துன்கைகட்கு விலங்கு! (வாரா)

,பின்னும் மகள் :

ஆபர ணங்கள் இல்லை யானால்-என்னை
ஆர் மதிப்பார் தெருவில் போனால்?
கோபமோ அம்மா இதைச் சொன்னால்-என்
குறை தவிர்க்க முடியும் உன்னால் (ஆப)

அதற்குத் தாய் :

கற்பது பெண் களுக்கா பரணம்-கெம்புக்
கல்வைத்த, நகை தீரா தரணம்!
கற்ற பெண்களை இந்த நாடு-தன்
கண்ணில் ஒற்றிக்கொள்ளுமன் போடு! (கற்)

☆ ☆ ☆

# மாணவர் எழுச்சி

(கல்யாணம் செய்துக்கோ என்ற மெட்டு)

நிற்கையில் நிமிர்ந்து நில்! ந
டப்பதில் மகிழ்ச்சி கொள்!
சற்றே தினந்தோறும் விளையாடு.
பற்பல பாட்டும் பாடிடப் பழகு!-நீ
பணிவாகப் பேசுதல் உனக் கழகு! (நிற்)

கற்பதில் முதன்மை கொள்
காண்பதைத் தெரிந்து கொள்
சுற்றித் திரிந்திடும் துஷ்டர் சிநேகிதம்
தொல்லை என்பதி லென்னசந் தேகம்? நீ (நிற்)

சித்திரம் பயின்று வா
தேன் போன்ற கதை சொல்
முத்தைப்போலே துவைத்த உடையணிவாய்.
புத்தகம் உனக்குப் பூஷணம் அல்லவோ?
போக்கடிக்காதே இதை நான் சொல்லவோ– நீ(நிற்)

பத்திரி கைபடி நீ
பலவும் அறிந்து கொள்
ஒத்துப் பிறர்க்கும் நலம் உண்டாக்கு!
நித்தமும் இந்தத் தேசம் தன்னை
நினைத்துப் பொதுப்பணிசெய் அவளுனக் கன்னை. (நிற்)

* * *

# நல்லினஞ் சேர்தல்

**(பக்ஷமிருக்கவேணும் மன்னவனே எ-மெ)**

*சேரிடம் அறிந்துசேர் எந்நாளும்-மைந்தா*
*தீயரை அணுகிடிற் பழி மூளும்!*
*சீரிய ஒழுக்கம்*
*சிறந்தநூற் பழக்கம்*
*ஆரிடம் உள்ளதோ அன்னவரிடமே-சினேகம்*
*ஆகுதல் அல்லவோடா உன் கடமை!*

*மண்ணின்குணம் அங்குள்ள நீருக்குண்டு-மைந்தா*
*மாலையில் மலர்மணம் நாருக்குண்டு.*
*திண்ணம் பன்றியொடும்*
*சேர்ந்த கன்றும் கெடும்!*
*கண்செய்த பாவம் தீயர் தமைக்காண்டல்-மைந்தா*
*கை செய்த புண்யம் நல்லார் அடி தீண்டல்*

*சடுதியிலே துஷ்டர் சகவாசம்-பிராண*
*சங்கடம் உணர் இந்த உபதேசம்*
*தடையிதில் ஏது*
*தாய் எனக் கோது?*
*சுடுநெருப் பானவரின் குணம் தெரிந்து-மைந்தா*
*சுப்புரத்தினம் சொல்லும் அமுதருந்து! (சேரிடம்)*

☆ ☆ ☆

# வழி நடத்தல்

**(சென்று கனி பறித்துக்கொண்டு எ–மெ)**

மரங்கள் அடர்ந்திருக்குங் காடு – கரு
வானில் உயர்ந்த மலை மேடு – தம்மில்
பிரிந்து பிரிந்து செல்லும் வருவாய் – நாம்
பிரியத்துடன் நடப்போம் விரைவாய்ப்
பெருங் குரலில் பாட்டும்
பேச்சும் விளையாட்டும் – நம்மை
விரைவில் அவ்விடம் கொண்டு கூட்டும்! – (மரங்கள்)
இளமை தன்னில் வலிமை சேர்ப்போம் – நாம்
எதிலும் தைரியத்தைக் காப்போம், – நாம்
அளவில் லாதநாள் வாழ – உடல்
அழகும் உறுதியு முண்டாக,
ஆசை கொண்டு நடப்போம்
அச்சமதைத் தொலைப்போம் – நம்
நேசர் பலரும் மனங் களிப்போம். (மரங்கள்)

❋ ❀ ❋

# பொங்கற் பாட்டுகள்

## பொங்கல் வாழ்த்து

### அறுசீர் விருத்தம்

தைத்திங்கள் முதல்நாள் என்றார்!
தமிழர்கள் திருநாள் என்றார்!
புத்தமு, தாக வந்த
பொங்கல்நாள் என்றார்க் கின்றார்!
கைத்திற ஓவி யங்கள்
காட்டுக வீட்டில் என்றார்!
முத்தமிழ் எழுக என்றார்!
முழங்குக இசைகள் என்றார்!

கொணர்கவே புதிய செந்நெல்
குன்றாக என்றார்!பெண்கள்
அணிகள்,பொன் னாடை யாவும்
அழகாகக் குவிக்க என்றார்!
மணமலர் கலவை கொண்டு
மலைஎனக் குவிக்க என்றார்!
கனுவகல் கரும்பும் தேனும்
கடிதினிற் கொணர்க என்றார்!

எழுத்தாளர் பொங்கல் வாழ்த்தே
எழுதுக ஏட்டில் என்றார்!
பழச்சுவை வருக என்றார்!
பட்டியல் எழுதிச் சென்று
வழக்கத்துக் கடைச்ச ரக்கு
வாங்கிவந் திடுக என்றார்!
முழுக்குலை வாழை மாவின்
தோரணம் முடிக்க என்றார்!

எழுந்தது கீழ்க்க டல்மேல்
இளங்கதிர், சூழைசத் தங்கம்
பொழிந்தது! விண்ணும் மண்ணும்
பொலிந்தது தமிழர் நாடு!
வழிந்தது பொங்கல் பொங்கி!
வாழ்த்தினர் பரிதி தன்னை!
தழைந்தது நெஞ்சில் இன்பம்.
தமிழர்கள் பொங்கல் உண்டார்.

வாழிய பொங்கல் நன்னாள்!
வாழிய திராவி டந்தான்!
வாழிய புதுமை நூற்கள்!
வாழிய தமிழ்க் கலைகள்!
சூழிய மணிமு கில்கள்!
துலங்குக நன்செய் யாண்டும்!
ஆழ்கடல் மிசை எழுந்த
அழகிய பரிதி வாழ்க.

❋ ❋ ❋

# பொங்கல் வாழ்த்து

**அகவல்**

பொன்னாய்ப் பூவாய்ப் போலிருந்த ஞாயிறே,
உண்ணும் விழிகள் உவக்கும்ஓ வியமே,
முன்னைக்கு முன்னர் முளைத்தழு தொளியே,
இந்நாள் மட்டும் இளமைமா றாமல்
புதிது புதிதெனப் போற்றும் பரிதியே,
இந்நாள் புதுமையிற் புதுமை இயற்றினாய்.
காலை மலரெடுத்துக் கட்டழகு கொட்டிக்
கோலக் கதிர்கள் குலுங்க, நீலக்
கடல்மிசை எழுந்த கதிரின் செல்வனே,
ஆடல்வா ழியநின் அழகு வாழிய!
புத்தம் புதிய முத்தரிசி ஆய்ந்து
தித்திக் கும்பால் செம்மையின் அளாவ
அலரிச் செவ்விதழ் அவிழ்ந்தன போல
இலகெரி அடுப்பில் ஏற்றிய பானை,
பொங்கிடப்,பொங்கலோ பொங்கலென் றார்த்தே
புரைதீர் வெல்லம், புலிப்பல் போன்ற
ஏலம், பருப்புச் சேலத்து நறுநெய்
நன்று சேர்த்துக் குன்றென இறக்கித்
தேன்பெய்து, முக்கனி சேர்த்து விருந்துடன்
ஒக்கலும் மக்களும் உரிமையின் உட்கார்ந்
திருள்நீக்கி எழுநின் எழுச்சி வாழ்த்தி
அருள்தேக் குழவர் வாழ்த்தி அந்தமிழ்
வாழ்வினை வாழ்த்தி வாழ்த்தி
மூழ்குவர் இன்பத்து முழுதுண்டு நன்றே!

❄ ❄ ❄

# திராவிட நாட்டுக்குப் பொங்கல் வாழ்த்து

### எண்சீர் விருத்தம்

அகத்தியனும் காப்பியனும் தோன்று முன்னர்,
அரியதமிழ்த் தலைக்கழகம் தோன்று முன்னர்,
மிகுத்தகடல், குமரியினை மறைக்கு முன்னர்,
விண்ணுயர்ந்த பனிமலைதான் நிமிரு முன்னர்ப்
பகுத்தறிவின் துணையாலே அரசி யற்றிப்
பல்கலையின் ஒளியாலே உலகம் காத்துத்
திகழ்பழைய தமிழகமே, இடைநாள் தன்னில்
திராவிடநா டெனப்போற்றும் என்றன் அன்னாய்,

பத்தன்று;நூறன்று;பன்னூ றன்று;
பல்லாயி ரத்தாண்டாய்த் தமிழர் வாழ்வில்
புத்தாண்டு, தைம்முதல்நாள், பொங்கல் நன்னாள்,
போற்றிவிழாக் கொண்டாடி உன்ந லத்தைச்
செத்தவரை மறந்தாலும் மறவா வண்ணம்
செந்தமிழால் வானிலெல்லாம் செதுக்கி வைத்தோம்!
பத்தரைமாற் றுத்தங்கம் ஒளிமாய்ந் தாலும்
பற்றுளத்தில் உன்பழஞ்சீ ர் மங்கிற் றில்லை.

தெலுங்குமலை யாளங்கன் னடமென் கின்றார்
சிரிக்கின்றாய் அன்னாய்நின் மக்கள் போக்கை!
நலங்கெட்டுப் போனதில்லை, அதனா லென்ன?
நான்குபெயர் இட்டாலும் பொருள்ஒன் றன்றோ?
கலங்கரையின் விளக்குக்கு மறுபேர் இட்டால்,
கரைகாணத் தவறுவரோ மீகா மன்கள்?
இலங்குதிரு வே, வையம் செய்த அன்னாய்
எல்லாரின் பேராலும் உனக்கென் வாழ்த்தே!

தமிழகமே, திராவிடமே, தைம்மு தல்நாள்
தனிலுன்னை வாயார வாழ்த்து கின்றேன்.
அமிழ்தான பாற்பொங்கல் ஆர உண்டே
அதைஒக்கும் தமிழாலே வாழ்த்து கின்றேன்;
எமைஒப்பார் எவருள்ளார்? எம்மை வெல்வார்
இந்நிலத்தில் பிறந்ததில்லை; பிறப்ப தில்லை,
இமைப்போதும் பழிகொண்டு வாழ்ந்த தில்லை
எனும்உணர்வால் வாழ்த்துகின்றேன்;
வாய்ப்பேச் சல்ல.
அன்றொருநாள் வடபுலத்தைக் குட்டு வன்போய்
அழிக்குமுனம் தன்வீட்டில் இலையி லிட்ட
இன்பத்துப் பொங்கலுண்டான், அதைப்போ
[லத்தான்.
இன்றுண்டேன்; அன்றுன்னை வாழ்த்தி னான்போல்
நன்றுன்னை வாழ்த்துகின்றேன் எனைப்பெற் றோயே
நல்லுரிமை உன்மூச்சில் அகன்ற தில்லை.
பொன்னேஎன் பெருவாழ்வே அன்பின் வைப்பே
புத்தாண்டு வாழ்த்துரைத்தேன் நன்று வாழ்க.

❋ ❋ ❋

# பொங்கல் பொங்கிற்றா?

**கலி வெண்பா**

உலகுநலம் காண உழவன் விதைத்தும்,
இலகு மணிக்கதிர் ஏறப் – பொலிதோள்
கவிழக் கதிரடித்துச் சேர்ந்திட்ட செந்நெல்
குவித்து நிமிர்ந்தான்!குளிரில் – அவிழ்த்த
கதிர்ச்செல்வன் தானும் கடல்மேல் நிமிர்ந்தான்;
"இது கேள் உழவனே, இந்த–முதுவையத்
தாட்சிஉனக் காகுக"என்று கதிரவன்
மாட்சியுடன் வாழ்த்தி மகிழ்கின்றான்–கேட்ட
உழவன்,"நிறைநாளின் செல்வனே உன்றன்
எழில்வாழ்க.'.என்னுமோர் வாழ்த்தை
மொழிகின்றான்.

துய்ய உடம்புதான் சோர்வதே இல்லாமல்
வையகம் வாழ்ந்திட வாழும்அம் மெய்யுழவன்
பொன்னின் புதுப்பரிதி வாழ்த்தியுளம் பூரித்துச்
செந்நெல்கொண டில்லத்தே சேர்த்திட்டான்–என்னே!
உயர்நெல்லைத் தீட்டும் உலக்கைப்பா டல்கள்!
அயில்விழிமாதர் அடுப்புயர்த்த பானைப்–பெயலான
பாலோடு முத்தரிசி மேலெழுந்து பாடிவர
ஏலங்கற் கண்டுநெய் இட்டபடி –மேலும்
துழவித்தேன் பன்னீர் சுளைக்கனி யாவும்
இழைய இழையத், தமிழால்–அழகுறவே
பொங்கலோ பொங்கல்என ஆர்த்தார்த்துச்
[செங்கரும்பும்
தங்கமேநேர் மஞ்சள் விளைச்சலும்–எங்கணும்
மாவிலைத் தாரும் மலியக், குருத்திலையைத்
தாவிவிரித்திட்ட தையலர்கள்–ஆவலொடும்
அள்ளிவட் டித்திட்ட பொங்கலமிழ் தத்தைப்

பிள்ளைகள், பேரர், பெருமான்கள்–உள் அன்பார்
அன்னைமார் எல்லோரும் ஆரஉண் டார்கள்!

ஒருவீடு போலத் தெருவீ டுகளும்,
தெருவீ டுகள்போலத் தென்னாட்–டிருக்கின்ற
வீடெல்லாம் இன்ப விளையாட்டாம், வீட்டிலுள்ள
மாடுகன் றுக்கெல்லாம் மாச்சிறப்பாம்–சோடிப்போம்!

மங்காத செந்தமிழீர் வாரீர்நும் வீட்டிற்பால்
பொங்கிற்றா? வாழ்க பொலிந்து.

❋ ❋ ❋

# பொன்னாடு வெல்கவே!

**எண்சீர் விருத்தம்**

*உண்டாயா நீ பொங்கல்? வீட்டிற்பால் பொங்கிற்றா?*
*உட்காரப்பா உட்கார்! உற்றுக்கேள்!இங்கோர்*
*பண்தழைந்து வருவதுகேள்!நன்றாய்க்கேள்! உன்றன்*
*பழநாட்டார் உள்ளத்தின் ஒலிஅதுதான் தம்பி!*
*பண்டுதொட்டுத் திராவிடத்தின் வடவெல்லை என்று*
*பகர்ந்துயர்ந்த விந்தயத்தின் இப்புறத்தி லுள்ள*
*எண்தவிர்ந்தார் எல்லாரும்,"எங்கள் திரா விடந்தான்*
*என்றுவிடு தலையடையும்"என்கின்றார் அன்றோ!*

*பனியில்லை;குளிரில்லை;இருள்கிழித்துக் கொண்டு*
*பகலவன்தான் தலைகாட்டப் பல்காட்டி வாழ்த்தி*
*இனியில்லை மடமைஎன ஆர்த்தாயே தம்பி*
*இரு!பார்இ தோஅறிவுக் கண்ணாடி பூண்டாய்!*

*முனைக்குமரி விந்தியத்தின் இடைப்பாங்கு வாழும்*
*முத்தமிழர் எல்லாரும், இத்திராவி டந்தான்*
*இனியடிமைத் தளையறுத்து விடுதலையே கொள்ள*
*ஏற்றசெயல் செய்கின்றார் தெரிகின்ற தன்றோ!*

*தைத்திங்கள் முதல்நாளின் திருவிழா, உன்றன்*
*தனிமையினை நீக்கித்தி ராவிடரெல் லாரும்*
*எத்தாலும் ஒன்றென்று காட்டிற்றுக் கண்டாய்!*
*இனத்துநினை வெல்லாம்உன் மனத்தளவே அன்றோ?*
*முத்துநிறை கீழ்க்கடல்மேற் கடல்தெற்கே குமரி,*
*முன்வடக்கில் விந்தியமாம் மேவுதிரா விடர்கள்*
*ஒத்திந்த நாட்டினது விடுதலைக்கே என்றும்*
*உழைக்கின்றார் நிலங்குலுங்க!உற்றறிநீ தம்பி.*

*என்நாடு பிரிகஎனப் பணிசெய்கின் றாய்நீ!*
*எதிர்ப்போனும் அதைத்தானே செய்கின்றான் தம்பி?*
*பொன்னாடு திராவிடமாம் என்கின்றாய் அஃது*

புன்நாடென் றுரைப்பானும் பொன்னாடென் போனே!
தென்னாட்டிற் கிளர்ச்சியினைச் செய்கின்றாய் நீ தான்.
சிரித்தபடி நிற்பானும் அதைத்தான்செய் கின்றான்
இன்னதனை நீயுணர மாட்டாயா தம்பி?
இனிவெற்றிக் கொடியேற்றல் ஒன்றுதான் பாக்கி!

மடமைஎன ஒண்றுண்டு!வாய்பெரிது!கையில்
வாள்ஒன்று வைத்திருக்கும் சிறைவீட்டு வாயிற்
படிமீது நிற்கும் !பல் லாற்பல்லை மெல்லும்!
பார்என்று கூச்சலிடும்!போர்நிறுத்தக் கெஞ்சும்!
விடேன் என்று மேற்செல்வாய்! விடுதலையைச்
செய்வாய்!

வீறிட்டுப் பாயும்உன் உடற்குருதி யால்உன்
கடமைசெய்வாய் ! அம்மடமை தலைகவிந்து போகும்.
கண்மூடி யிருந்திட்டால் மண்மூடும் உன்னை!

உன்நாட்டை மீட்கநீ உயிர்நீக்கப் பெற்றால்
உயிர்நீங்கச் செய்தானும் உன்நாட்டை மீட்டோன்!
தென்னாட்டிற் பிறந்தாயா? இல்லையா? நீஇத்
திருநாட்டின் மறவனா? இல்லையா? வீரர்
கல்நாட்டிக் கல்நாட்டிக் காலமெலாம் குருதிக்
கடலேழுக் கடலாகப் புகழ்நாட்டி னார்இப்
பொன்னாடு வெல்கவே பொங்கலோ பொங்கல்!
புதியதிரா விடம்வாழ்க பொங்கலோ பொங்கல்!

❄ ❄ ❄

# தைத்திருநாளே மகிழ்ச்சி கொண்டுவா!

**எண்சீர் விருத்தம்**

அரிசியில்லை விறகில்லை கறியில்லை நல்ல
அரசில்லாக் காரணத்தால் இவ்வளவு தொல்லை!
வரிசையொடு வாழ்ந்தார்கள் தமிழ்நாட்டு மக்கள்!
மன்னவர்கள் அந்நாளில் முறைசெய்த தாலே!
பரிசில்பெறும் தமிழ்ப்புலவர் அந்நாளில் வாழ்ந்தார்
பைந்தமிழ்வாழ்ந்த துவாழ்ந்த திப்பெரிய வையம்!
வருவாய்நீ தைப்பொங்கல் திருநாளே வாவா!
வறுமைஅறத் துன்பமற மகிழ்ச்சிகொண்டு வாவா!

வெட்டவெளி வானத்தை மாணிக்கம் ஆக்கும்
செங்கரும்பு நாட்டினிலே வெல்லமில்லை; வாழ்வை
எட்டிக்காய் ஆக்கிவிட்டார் ஆளவந்தார்! மானம்
இருப்பதாய்ச் சொல்கின்றார் அறிவற்ற பேச்சே!
எட்டுகின்ற பாங்கெல்லாம் தமிழர்புகழ் அன்றி
இல்லாமை என்னுமொரு பேச்சிருந்த தில்லை ;
மட்டற்ற செல்வமே "தைப்பொங்கல் நாளே"
வறுமையறத் துன்பமற நீவந்தாய் வாவா!

தமிழ்இகழ்ந்தார் கல்சுமக்கும் படிசெய்த இந்தத்
தமிழ்நாட்டில் தமிழர்க்கோர் ஆதரவும் இல்லை;
தமிழறியார் ஆளுகின்றார் அதனாலித் தொல்லை.
தமிழ்அறிந்தார் ஆட்சியினைக் கண்டார்அந் நாளில்!
கமழ்கின்ற கருத்துண்டா இந்நாளில்? இன்று
கண்குழிந்த ஆளவந்தார், வடநாட்டின் அடியார்!
அமிழ்தேவா! தைப்பொங்கல் திருநாளே வாவா,
அகமகிழ்ச்சி கொண்டுவா. எல்லோர்க்கும் இங்கே!

ஏர்தட்டா துழுதுழுது பயன்விளைக்கும் உழவர்
எழில்நாட்டின் முகத்தினிலே அழகில்லை, நாட்டை
ஓர்தட்டாய்த் தட்டிப்போய்த் தாம்வாழ எண்ணும்
ஆளவந்தார் செய்கையினால் உற்றதிந்தத் தொல்லை
போர்மூட்டும் முரசொலிக்கத் தமிழ்நாட்டில் இந்நாள்
பொதுத்தொண்டு வெல்கவே வெல்கவே என்று
மார்தட்டி வந்தாய்நீ தைப்பொங்கல் நாளே
வறுமையறத் துன்பமற மகிழ்ச்சிகொண்டு வாவா!

இருட்கடலும் ஒளிக்கடலே! புதுப்பரிதி, முகத்தை
எதிர்காட்டி ஆயிரம்செங் கதிர்க்கைகள் நீட்டி
அருட்பெருக்கால் வருகின்றாய் ஆண்டுக்கோர் நாளே!
அன்னையே தமிழரெல்லாம் உன்னருமை மக்கள்
பிரிக்கின்றார் எம்மையெல்லாம் யாம்பிரிய மாட்டோம்
பிழைசெய்தார் யாம்சிறிதும் பிழைசெய்ய மாட்டோம்
உருப்பட்டோம் உன்வரவால்! பொங்கலோ பொங்கல்!
உயர்வாழ்வு நிலைநிற்க! வாழியநீ வாழி.

❄ ❄ ❄

# பொங்கலோ பொங்கல்!

**வண்ணம்**

***தந்தாந தந்த–9 தந்தத்தத் தானா–1***

பொங்கலோ பொங்கல்
பொங்கலோ பொங்கல்
என்றுபா டுங்கள்
மன்றிலா டுங்கள்
எங்கள்நா டெங்கள்
அன்புநா டென்று
நன்றுபா டுங்கள்
பொங்கியா டுங்கள்
பொங்கலோ பொங்கல்
பொங்கிற்றுப் பாலே!

தங்கமே தங்கம்
மண்டுநீ ரெங்கும்
இங்கும்வா னெங்கும்
நன்றுகா ணுங்கள்
மங்கைமார் மைந்தர்
நண்பரோ டன்பு
மிஞ்சியா டுங்கள்
சிந்துபா டுங்கள்
பொங்கலோ பொங்கல்
பொங்கிற்றுப் பாலே!
எங்கும் ஆதந்து
வந்தபா லுங்க
ரும்பினோ டும்க
லந்துமே பொங்க
நைந்தவா கும் ப

முங்கள் தே னுங்க
லந்துவா னுங்க
மழ்ந்தவா றுண்ட
பொங்கலோ பொங்கல்
பொங்கிற்றுப் பாலே!

இங்குநா மின்று
கண்டபே ரின்பம்
என்றுமே கொண்டி
லங்குவோம் நம்,பி
றந்தநா டும்.கி
டந்த சீ ரும்பொ
ருந்தவே நன்று
முந்தையோர் கண்ட
பொங்கலோ பொங்கல்
பொங்கிற்றுப் பாலே!

❄ ❄ ❄

# வாழ்க தமிழர் திருநாள்

**வண்ணம்**

தனன தந்த தத்தத்தனந்த தன தானா
தனன தந்த தத்தத்தனந்த தன தானா
தனன தந்த தத்தத்தனந்த தன தானா தன தானா

தளையவிழ்ந்து செக்கச்சிவந்த மலர் போலே
தமிழ்நிலஞ்சி றக்கப்புரந்த இறை போலே
தலைசிறந்த முத்தைச்சொ ரிந்த அலை மேலே கதிர்காணீர்

தவழ்குழந்தை கொட்டிப்புரிந்த நகை தானோ!
அழகுமங்கை நெற்றிக்கிருந்த ஒளி தானோ!
தகதகென்று பொற்றட்டெழுந்த வகையாதோ அறிவீரோ

இளையசெங்க திர்க்குப்பரிந்து தொழு வாரே
இதுவிதெங்கள் தைக்குச்சிறந்த முதல் நாளே
எனவிளைந்த நெற்குத்திளங்கும் மகிழ்வாரே மடவாரே

இலைமரங்கு ருத்துக்கள் தெங்கு கமு காலே
எழிலுறும்செ ழிப்புற்றஎங்கள் தமிழ் நாடே
இசைஎழுந்து திக்கெட்டுமுந்தும் அதனூடே மகிழ்வோடே

வளமிகும்பு லத்திற்றிரிந்து வரு மாடே
வகையொடுங்க லத்திற்கறந்து தரு பாலோ
டரிசியும்சு வைப்புக்கரும்பு பிழிசாறோ டனலாலே

இனிதுபொங்க வைத்துக்கமழ்ந்த பொடி யோடே
மலிவொடும்ப ருப்புச்சொரிந்த கனி தேனோ
அளவநன்றி றக்கித்திருந்தும் இளவாழை இலைமேலே

உளவிருந்தி னர்க்குப் பகிர்ந்து பரி வாலே
உடனிருந்து ணப்பெற் றடைந்த சுவை யாலே
உளமகிழ்ந்ததைச் சற்றியம்ப முடியாதே ஒருநாவால்

உழவரன்பு மைப்பிற் பிறந்த பெரு வாழ்வே
தழைக நன்றெ மைப்பெற்று வந்த தமிழ் தானே
தழைக எங்கள் வெற்றிக்குகந்த பெருநாளே திருநாளே!

# உழவர் திருநாள்

உழவே தலைஎன் றுணர்ந்த தமிழர்
விழாவே இப்பொங்கல் விழாவாகும்! காணீர்
முழவு முழங்கிற்றுப் புதுநெல் அறுத்து
வழங்கும் உழவர்தோள் வாழ்த்துகின் றாரே!

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்என்ற சொல்லிற்
பழுதுண்டோ? காணீர் பழந்தமிழர் "நாங்கள்
உழவரே" என்றுவிழா ஒப்பி மகிழ்ந்தாரே!

உய்யோமோ செங்கதிரே நீடுபனி ஓட்டிவந்த
தையே முதற்றிங்கள் தைம்முதலே ஆண்டுமுதல்
கையே துணையாகும் கைத்தொழிலே ஆக்கமென்று
செய்யே தரும்செந்நெல் சேயிழையார் குற்றினரே!

தேரிழுப்பும், செம்பெடுப்பும் அல்லவிழா! அன்னவெல்லாம்
ஓரிழுப்புநோய்! -பொதுவின் உள்ளவிழை வேவிழா!
ஏரெழுப்பும் புத்தம் புதுச்செல்வம் இட்டபால்
பாரழைக்கப் பொங்கற் பயன்மணக்க வைத்தனரே!

அழகின் பரிதி உயிர்; அவ் உயிரை
முழுதும் நிறுத்தும் அமிழ்துதான் முத்து
மழை! உலகு தாய்! வளர்ப்புப் பாலே பயன்! நெய்
ஒழுகஉண்டார் பொங்கல் எல்லாரும் ஒன்றியே!

ஆடைஎல்லாம் அந்நாள் மடிப்பு விரித்தவைகள்!
ஓடைஎனப் பாலும், உயர்குன் றரிசியும்
வாடைநெய்யும் பொங்கி வழியவே பொங்கலிட்ட
நாடுதான் கொண்ட நனிமகிழ்ச்சி செப்பரிதே!

இகழ்ச்சி அணுகா திலையில் அமிழ்தைப்
புகழ்ச்சிசொல்லிப் புத்துருக்கு நெய்யொழுக உண்ட
மகிழ்ச்சியே இந்நாள்போல் எந்நாளும் மல்க
மிகச்சீ ரியதமிழும் மேன்மையுற்று வாழியவே!

# பொங்கல் நாளில் அவர்!

**சிந்து கண்ணிகள்**

செங்கதிர் எழுந்ததடி
எங்கும்ஒளி ஆனதடி
பொங்கல்திரு நாளடியே
என்னருந் தோழி–அதோ
பொன்னரிவாள் ஏந்திவிட்டார்
என்னருந்தோழி.

தெங்கின்இளம் பாளையைப் போல்
செந்நெல்அறுத் தார்உழவர்
அங்குக்களம் கொண்டடித்தார்
என்னருந் தோழி – அவர்
சங்கத்தமிழ் பாடிப்பாடி
என்னருந்தோழி.

கட்டடித்தே நெல்லளந்தே
கட்டைவண்டி ஏற்றுகின்றார்
தொட்டளித்தார் தைப்புதுநெல்
என்னருந் தொழி– அவர்,
தோளைவையம் வாழ்த்திற்றடி
என்னருந்தோழி.

கொட்டுமுழக் கோடுநெல்லைக்
குற்றுகின்ற மாதரெல்லாம்
பட்டுடை இழுத்துக் கட்டி
என்னருந் தோழி–பாடும்
பாட்டெல்லாம் வெல்லமடி
என்னருந் தோழி.

முத்தமிழ் முழக்கமடி
எங்கணும் இசைக் கருவி

முத்தரிசி பாலில் இட்டார்
என்னருந் தோழி–வெல்லக்
கட்டியுடன் நெய்யுமிட்டார்
என்னருந் தோழி.

தித்திக்கும்தே னும்பலாவும்
செவ்வாழையும் மாம்பழமும்
ஒத்துக்கலந் துண்டாரடி
என்னருந் தோழி–அவர்
ஒக்கலும் மக்களு மாக
என்னருந் தோழி.

எங்கணும் மகிழ்ச்சியடி
எவ்விடத்தும் ஆடல் பாடல்
பொங்கலோ பொங்கல் என்றார்
என்னருந் தோழி
பொங்கிற்றடி எங்குமின்பம்
என்னருந் தோழி.

திங்களிது தையடியே
செந்தமிழ ரின் திருநாள்
இங்கிது போல் என்றைக்குமே
என்னருந் தோழி
இன்பம் நிலைகொள்ள வேண்டும்
என்னருந் தோழி.

❋ ❋ ❋

# தங்கக் கதிர் வாழ்க

**சிந்து கண்ணிகள்**

கங்குல்ப றந்ததடி எங்கும் வெளுத்ததடி
தங்கவெய்யில் கண்டதுகி ழக்கிலே-நம்
கையில் பயன்கொடுக்கத் தையும் பிறந்த தடி
காடெங்கும் கன்னல்ப ழக்குலை-நல்ல
களந்தோறும் விளைந்தநெல் அளந்தனர் உழவர்
கங்குல்ப றந்ததடி எங்கும் வெளுத்ததடி
தங்கவெய்யில் கண்டதுகி ழக்கிலே
கட்டாக ஏருழுவர்
பட்டாளம் கிளம்பிற்றே-கட
கட வெனச் சகடுகள் கடந்தன தெருவை (கங்)

எங்கும்பு துநெல்லடி எங்கும்உ லக்கையொடு
மங்கையர்கள் செந்தமிழில் பாடினார்-நல்ல
திங்கள் கிடந்ததுபோல் எங்கும் அரிசியடி
தீம்பாலில் இட்டதனை மூடினார்-மிகு
தித்திப்பிற்கொ தித்தஅந்த முத்துக்கடல் பொங்கிற்றடி
எங்கும்பு துநெல்லடி எங்கும்உ லக்கையொடு
மங்கையர்கள் செந்தமிழில் பாடினார்
தென்னாடெல்லாம் பொங்கல்
பொன்னாய விளைந்ததுவே பல
தெருவிலுந் தமிழிலும் கருவிகள் தருமிசை (கங்)

அங்கங்கு வந்திடும்வி ருந்தும்க லந்தபடி
அன்பும்சி றந்தபடி உண்டனர்-நமை
அண்டும் பகைவறுமை கண்டுநடுங்கும்படி
யான மனமகிழ்ச்சி கொண்டனர்-அவர்
ஆடுவதும் பாடுவதும் அரங்கினிற் றென்பாங்கே
அங்கங்கு வந்திடும்வி ருந்தும்க லந்தபடி
அன்பும்சி றந்தபடி உண்டனர்

தெங்கு கமுகு வாழை
சிறப்பினைச் செய்தன இளஞ்
சிறுவர்கள் சிறுமியர் நெறிதோறும் மகிழுவர் (கங்)

மங்கா மகிழ்ச்சியாலே மாடுகன்று கழுவிப்
பொங்கல்வி ருந்தளித்த அன்பிலே—அவை
அங்கு மிங்கும் ஓடக் கொங்குமலர் மாலை
ஆடிக் குலுங்கும் அவை கொம்பிலே இன்று
வாய்ந்த மகிழ்ச்சிஎன்றும் வாய்ந்தபடியே யிருக்க
மங்கா மகிழ்ச்சிஎன்றும் வாய்ந்தபடியே யிருக்க
மங்கா மகிழ்ச்சியாலே மாடுகன் று கழுவிப்
பொங்கல்வி ருந்தளித்த அன்பிலே நம்
வளநாட்டில் செந்தமிழே
வாழ்கவே வாழ்கவே மிகு
மணநல மொடுதமி ழர்கள் நலமுறவே. (கங்)

❋ ❋ ❋

# புது நாளில் புது வாழ்வு

**சிந்து கண்ணிகள்**

பகற்பொழுதிற் பொங்கற் புது
பானை வாங்கி வருகையி லே
நகைத்தபடி என்னை அவன் பார்த்தான்—நான்
நாணத்தினால் உள்ளமெலாம் வேர்த்தேன்.

முகமறியாப் பெண் முகத்தில்
முத்துநகை வந்து மொய்த்தால்
மகளிரெலாம் என்ன நினைப்பார்கள்?—என்
மனநிலையில் ஐயமுங் கொண்டார்கள்.

சேவல் கூவக்கீழ்க் கடலில்
செம்பரிதி தோன்ற—அந்த
நாவற்குள நீரெடுக்கச் சென்றேன்—அங்கு
நம்திருநாள் இன்றல்லவோ என்றான்.

காவலுண்டு பற்பல பேர்
காணலுண்டு காளையின் மேல்
ஆவலுண்டு காட்டிக்கொள்ளவில்லை—அவன்
அகம் புகுந்தான் அதுமட்டுந்தான் தொல்லை.

நாட்டி லெங்கும் பொங்கல் வாழ்த்து
நடப்பதெலாம் தைத் திருநாள்
வீட்டினில் நான் பொங்கலுண்ணும் வேளை—அதில்
வெல்லமாய் விளைந்தான் அந்தக் காளை.

தோட்டத்திலோர் ஊஞ்ச லிட்டுத்
தோகையரோ பாடுகையில்
பாட்டினில்ஓர் செந்தமிழும் ஆனான்—அந்தப்
பண்ணிலெல்லாம் நல்லிசையாய் ஆனான்.

ஆடலிலும் பாடலிலும்
அன்னவனே என்நினைவில்

கோடைமழை போற் குளிரச் செய்தான்–என்
கொள்கையிலே காதலினைப் பெய்தான்.

ஆடியபின் வீடு வரும்
அவ்விருண்ட தோப்பினிலே
ஓடி வந்தே கட்டி முத்தம் தந்தான்–அது
பொங்கல் திருநாள் அளித்த செந்தேன்.

❄ ❄ ❄

# அன்பர் வருநாள்

### அறுசீர் விருத்தம்

பொங்கல்நாள் வருக! கீழ்ப்பால்
புதுக்கதிர் எழுக வாழ்க!
இங்கெனைத் தனிவி டுத்தே
ஏகினார் வருவா ரன்றோ?
அங்கையிற் பெட்டி தூக்கி
ஆளிடம் மூட்டை தந்து
பெங்களூர்த் தெருக்க டந்து
பெருவண்டி நிலையம் சேர்வார்!

தைவிழா வருக! கீழ்ப்பால்
புதுக்கதிர் தளிர்க்க! வாழ்க!
மெய்இங்கே உயிர்அங் கென்றே
சென்றவர் மீள்வார் அன்றோ?
உய்என்று சீழ்க்கை காட்ட
உட்கார்ந்த படிஎன் அன்பர்
தையலை எண்ண, மெல்லத்
தவழ்ந்திடும் புகைத்தல் வண்டி.

தமிழர்நாள் வருக! கீழ்ப்பால்
புதுக்கதிர் தழைக! வாழ்க!
அமிழ்தூறத் தழுவுந் தோளார்
அகன்றனர் வருவா ரன்றோ?
சுமைஎரி மலை ஒன்றங்குத்
தொடர்மலை இழுத்த தென்ன
இமைப்பிற்பக் கத்தூரில் வண்டி
இச்சிச்சென் றோடி நிற்கும்.

தைப்பொங்கல் வருக! கீழ்ப்பால்
தனிக்கதிர் எழுக! வாழ்க!
ஒப்பிலா அன்பர் என்றன்

உயிர்காக்க வருவா ரன்றோ?
இப்பக்கம் வரும்அவ் வண்டி
எதிர்ப்பக்கம் ஓடும் காடு
உட்பக்கம் பார்த்தால் வண்டி
ஓடும்! ஓடாது காடு!

உழவர்நாள் வருக! கீழ்ப்பால்
ஒளிச்செல்வன் எழுக! வாழ்க!
வழங்காமற் சென்றார் இன்பம்
வழங்கிட வருவா ரன்றோ?
முழங்கியே நிற்கும் வண்டி
முறுக்கோமப் பொடிஆரஞ்சிப்
பழம்விற்பார்-செய்தித் தாள்தான்
பசிதீர்க்கும் அத்தா னுக்கே!

பாற்பொங்கல் வருக! கீழ்ப்பால்
பகலவன் எழுக! வாழ்க!
வேற்றாள்போல் சென்றார் அன்பு
விளக்காக வருவா ரன்றோ?
நேற்றேறி இருப்பார்! இவ்வூர்
நிலையத்தை அடைவார் இன்று
நூற்றைந்து கூலி யாட்கள்
நுழைவார்கள் கூலி என்றே.

பெரும்பொங்கல் வருக! கீழ்ப்பால்
புதுக்கதிர் பிறக்க! வாழ்க!
இரும்பு நெஞ்சத்தார் சென்றார்
இன்புற வருவா ரன்றோ!
திரும்பிய பக்க மெல்லாம்
தெரிந்தவர் காண்பார்! அத்தான்
பதிந்தகட் டணச்சீட் டீந்து
பின்புற முகப்பில் நிற்பார்!

திருவிழா வருக! கீழ்ப்பால்
செங்கதிர் எழுக! வாழ்க!
உருமறைத் துறைவார் என்றன்
உளம்பூக்க வருவார் அன்றோ?
தெருவெலாம் வண்டி நிற்கும்
நல்லதாய்த் தெரிந்து சத்தம்
ஒருரூபாய் பேசி, மூட்டை
யுடன்ஏறி அமர்வார் அத்தான்!

பொன்விழா வருக! கீழ்ப்பால்
புதுக்கதிர் எழுக! வாழ்க!
அன்பிலார் போற் பிரிந்தார்
ஆர்வத்தால் வருவா ரன்றோ?
முன்னோக்கி வாளன் பார்வண்
டிக்காரர்! முன்ந கர்ந்தால்
பின்னோக்கிக் குதிரை போகும்
பிழைசெய்தார் நெஞ்சம் போலே!

இனிக்கும்நாள் வருக! கீழ்ப்பால்
இளங்கதிர் எழுக! வாழ்க!
தனியாக்கிச் சென்றார் உள்ளம்
தவிர்த்திட வருவார் அன்றோ?
புனையப்பொங் கற்புத் தாடை
வாங்கிடப் போவார் அன்பில்
நனையத்தான் வேண்டும் என்பேன்
நன்மாலை வந்த தாலே!

❄ ❄ ❄

# வாழிய செந்தமிழ்

### எண்சீர் விருத்தம்

சிரித்தபடி புறப்பட்டான்! அவன்சி ரிக்கச்
சிரித்தனவே மலரெல்லாம்! சோலை யெல்லாம்!
ஒருத்தன்அவன்! அன்றன்று புதியன்! இந்நாள்
உவகைதரும் தைப்பொங்கல் நாளைச் செய்தான்!
விரித்தபடி புறப்பட்டான் ஒளியை; வாழ்வை
விளைத்தபடி எழுந்திட்டான் கடலின் மேலே!
தெருத்தோறும் தமிழர்விழா விளைக் கவந்த
சீ ரானை வாழ்த்திநாம் நீரா டோமோ!

வானெல்லாம் ஒளியாக்கி வையத் துள்ள
மலையெல்லாம் கடலெல்லாம் வயல்க ளெல்லாம்
கானெல்லாம் மூவேந்தர் வழியில் வந்த-
கடும்போரில் இடம்பெயராத் தமிழ மக்கள்
ஊனெல்லாம் உள்ளத்தின் உள்ள மெல்லாம்
ஒளியாக்கி உயர்ந்தானை வாழ்த்தி வாழ்த்தித்
தேனெல்லாம் வண்டுண்டு யாழ்மி ழற்றும்
செந்தாம ரைக்குளத்தில் நீரா டோமோ!

### அறுசீர் விருத்தம்

செங்கதிர் வாழ்த்தி மாதர்
செழும்புன லாடு கின்றார்!
அங்கோர்பால் நன்செய்ச் செல்வம்
அறுவடை செய்த டித்து
வங்காளக் கோணி யிட்டு
மலைநிகர் மாடி ணைக்கப்
பொங்கல்நாள் வாழ்க என்று
புறப்படும் புதுநெல் வண்டி.

இன்புறக் கூடந் தன்னில்
இறக்கிய மூடை கொட்டி
அன்புடன் பொங்கற் கென்றே
அளந்திடும் மணாளர் தோள்கள்!
மன்னுந்தோள் வாழ்த்தி அள்ளும்
மங்கைமார் மலர்ச்செங் கைகள்!
தென்பாங்கு பாடு கின்றார்
நெற்குற்றும் சேயி ழைமார்!

### பஃறொடை வெண்பா

விந்தியத்தின் தென்பால்
விரிமுக் கடல் முழங்கும்
முந்தைத் தமிழர்
முதுநா டணிநகர்கள்,
சிற்றூர், தெருக்கள்,
திகழ்இல்லந் தோறுமே
குற்றிய தும்பைப்பூப்
போல்அரிசி கொண்டமட்டும்
ஆப்பயந்த பாலில்
அமிழ்தாகப் பொங்கிவரப்
பூப்பயன்வாய் மாதர்கள்
பொங்கலோ பொங்கலென்று
வெல்லம் நறுநெய்
விரைப்பொடியோ டிட்டிறக்கி
நல்லதேன் முப்பழங்கள்
நல்கி, விருந்தோடும்
உள்ளம் மகிழத்தாம்
அள்ளூற உண்பவர்,
வாழியர் எங்கள்
வளநாட்டுச் செந்தமிழர்!
வாழிய செந்தமிழ் என் றார்!

# செங்கதிர் வாழ்க!

பொங்கற் புதுநாள் முகமலர்த்திப் பொன்னான
செங்கதிர்ச் செல்வன் திரைகடலின் மேலெழுந்தான்;
எங்கட்குப் புத்துயிரும் நல்கிப் பெருவாழ்வு
தங்கப் புரிந்த தகைமையினை வாழ்த்துவமே!

மூடு பனிவிலக்கி மொய்த்த குளிர்விலக்கி
நாடு நினைத்தஎலாம் நன்கு தொழிற்படுத்தித்
தோடவிழ்த்துச் செம்பரிதி பொன்வெய்யில்தூவுகின்றான்
வீடுமலி பொங்கல் விழாப்பாடி வாழ்த்துவமே!

சேற்றிற்செந் தாமரைபோல் செங்கதிர்க்க ருங்கடலில்
தோற்றஞ்செய் தான்எங்கள் தோகையர்கள் நீராடி
மாற்றுப்பொன் னாடை மடிப்பு விரித்துடுத்தே
ஊற்றியபாற் பொங்கல் உவந்துவந்து வாழ்த்துவமே!

அரும்பும் இளநகையார் அங்கங்கே செந்நெல்,
கரும்பு, கனிவாழை, தேன்நெய் தயிர்பால்
தரும்பயன்மேற் பொங்கும் தைப்பொங்கல் உண்ண
வரும்பரிதி நாம்பாடி வாயார வாழ்த்துவமே!

காடெல்லாம், நாடுநகர், வீடெல்லாம், வீட்டுமேல்
ஓடெல்லாம் பொன்னாக்கி ஆர்கலிமேல் உற்றகதிர்,
ஆடலினால் பாடலினால் ஆர்த்த பெரும்பொங்கல்
கோடல் மகிழ்ச்சியினால் கூடிநாம் வாழ்த்துவமே!

❄ ❄ ❄

# வருவாய் கதிரே!

வருவாய் வருவாய் கதிரே – தை'ம்
மதியே ஒளியே வருவாய்
திருவே உணர்வே வருவாய் – எம்
செயலின் தெளிவே வருவாய்
இருளும் பனியும் குளிரும் – பல
இடரும் தொடரா வகையே
புரிவாய் சுடரே வருவாய் – எம்
பொங்கற் புதுநாள் வருவாய்.

விலகாப் பாசிப் பொய்கை – மிசை
விரியும் செந்தாமரை போல்
அலைசேர் நீலக்கடல் மேல் – கதிர்
அவிழும் பகலே வருவாய்
கலையின் முதலே வருவாய் – எம்
கண்ணின் மணியே வருவாய்
மலையும் காடும் தெருவும் – ஒளி
மருவப் புரிவாய் வருவாய்.

காவிரி ஆற்றுத் தண்ணீர் – எம்
கழனிகள் தோறும் பாய்ச்சி
ஆவலின் நாட்டைப் பாடி – நல்
அடைவுறும் எருதால் உழுதே
தூவிய விதையும் காத்தோம் – வயல்
சுற்றிலும் வேலி அமைத்தே!
ஆவன செய்தோம் மடைநீர் – வடி
வாக்கித் தேக்கியும் வந்தோம்.

ஆழக் கிடங்கெ டுத்தே – நிறை
வாகத் தண்ணீர் தேக்கி
வாழை, கரும்பு நட்டோம் – கால்
வைத்தே சாரம் செய்தோம்
தாழப் புதைத்த மஞ்சட் – பயிர்
தழையத் தழையக் காத்தோம்;

வாழ்வின் பயனைக் கோரி – உன்
வரவை நோக்கி யிருந்தோம்.

வருவாய் வருவாய் சுடரே – பனி
மாற்றித் தோற்றிய மணியே
புரைதீர் வாழ்வின் பயனே – யாம்
புதுநெல் அறுவடை செய்தோம்
கரும்பு வெட்டிச் சேர்த்தோம் – செங்
கனியோடு வாழை சாய்த்தோம்
திரும்பும் இடம்எங் கெங்கும் – நல்
திருவே புரிவாய் வருவாய்.

எருமைக் கண்போல் நாவற் – கனி,
இலந்தை, மாதுளை, கொய்யா,
பெருமுந்திரியின் பருப்பும் – தேன்
பிழிவும் யாண்டும் கொழியும்!
மருவின் கொழுந்தும் மலரும் – மணம்
மருவத் திருவே வருவாய்.
வருவாய் வெயிலே அழகே – எம்
வாழ்த்துக் குரியோய் வருவாய்!

புதுநெல் லரிசியி னோடு – பால்
பொங்கல் பொங்கிட எங்கும்
அதிர்வளை மங்கை மார்கள் – தம்
அன்பும் தேனும் கலந்து
முதிரா வழுக்கை இளநீர் – நனி
முற்றற் கழையின் சாறும்
உதிர்மா துளையின் முத்தும் – தந்
துவக்க உவக்க நின்றார்.

பொன்வண் ணைப்புத் துருக்கு – நெய்
புறங்கை ஒழுகப் பொங்கல்
இன்பம் பெறுமா றுண்போம் – எம்
இனிதாம் பொழுதே வருவாய்
சொன்னோம் பொங்கல் வாழ்த்தே – எம்
தூய்மைத் தமிழால் நாங்கள்.
தென்பாங் கடைந்த செல்வம் – எம்
திரவிடம் வாழிய நன்றே!

# பொங்கல் விழாவில் சிறுவர் சிறுமியர்

### பொன்னூசல்

பொன்னூசல் எல்லோரும் ஆடுவமே – நல்ல
பொங்கற் புதுநாளைப் பாடுவமே
தென்னாடு வாழிஎன் றாடுவமே – நல்ல
செம்பரிதி வாழிஎன் றாடுவமே. (பொ)

கன்னடம் தெலுங்குமலை யாளம்துளுவம் – நல்ல
கன்னல்நிகர் செந்தமிழும் ஒன்றென்றே
மன்னிய திராவிடர்கள் எல்லோரும் – பிறர்
வந்தசைக்க ஒண்ணாத குன்றென்றே. (பொ)

சந்தனப் பொதிகைமலை எங்கள்உடைமை – வெண்
சங்கெறியும் தென்குமரி எங்கள் உடைமை
வந்தசைக்க ஒண்ணாத மறவர் நிலம் – நல்ல
வங்கம்வரை எங்கள்நிலம் வாழிய என்றே. (பொ)

முத்தெடுக்கும் மூன்றுகடல் நட்டநடுவில் – நல்ல
முல்லைமரு தம்குறிஞ்சி நெய்தல் கிடந்தே
மெத்தநலம் செய்திடும் திராவிடநிலம் – நன்கு
வெல்கவெல்க வெல்கவெல்க வெல்கஎனவே. (பொ)

❄ ❄ ❄

# பந்தாடல்

### எடுப்பு

பொங்கல் திருநாளில் பூப்புனை பந்தாடிச்
செங்கதிர் வாழ்த்திடுவோம் – நாம்
செங்கதிர் வாழ்த்திடுவோம். (பொ)

### உடனெடுப்பு

தங்கவெயில் ஒளிதன்னில் குளிப்போம் – செந்
தமிழில் பாடி உள்ளம் களிப்போம். (பொ)

### அடிகள்

அங்கங்குப் பாடல்களும் அங்கங்கு நல்லிசையும்
அள்ளூறச் சொல்லுகின்ற போது – இங்
கெங்கும் நறும்புகையும், பூவுங்கலவையும்
ஏறிக் கமழும் விண் மீது
சங்கை அலையெறியும் தண்கடல் நாட்டிலே
தாம்தாம் தாம்என்றே நாமும்குதித்தே. (பொ)

விட்டெறிந்த பூப்பந்து சிட்டாய்ப் பறந்ததுகண்
எட்டாத உயரத்தில் சென்றே – நம்
பட்டாடை பறக்கக் கூந்தல்பறக்கமுற்
பட்டுப் பிடிப்போம் அதைநன்றே
கட்டாணி முத்துநகை மங்கையரே கைப்பந்து
கட்டுத் தளரும்வகை விட்டடிப்போம் தொடர்ந்து, (பொ)

❋ ❋ ❋

# பொங்கல் விளையாட்டு

தையும் பிறந்தது நன்றாம் – நாம்
தைதை தைஎன்றாடு கின்றோம்
வைஇங்குப் பொங்கலை என்றோம் – நாம்
வாயார அள்ளிஉண் கின்றோம்.

நெய்யில் மிதக்கின்ற பொங்கல் – பால்
நிறைய வார்த்தபுதுப் பொங்கல்
செய்யில் விளைந்த முத்தரிசி – நறுந்
தேனாய் இனிக்கின்ற பொங்கல்.

முந்திரிப் பருப்புமிட்ட பொங்கல் – கொடி
முந்திரிப் பழங்களிட்ட பொங்கல்
சிந்தாமல் கையில் அள்ளும்போதே – வாய்
தித்திக்கும் சர்க்கரைப் பொங்கல்.

இந்த மட்டுந்தானா சேதி? – பார்
இவ்வளவு செங்கரும்பு மீதி.
முந்தி இதில்நீயும் ஒருபாதி – எடு!
மொய்த்திருக்கும் எறும்பினை ஊதி.

❋ ❋ ❋

# பொன் கொடிக்குப் பொங்கல் வாழ்த்து

### எடுப்பு

திராவிட நாட்டு மணிக்கொடிக்கே நாம்
பெரும் பொங்கல் வாழ்த்துரைப்போம். (தி)

### உடனெடுப்பு

கருமுகில் கருங்கடல் பரப்பினில் மாணிக்கப்
பரிதி முழுவட்டம் ஒளிசெய்தல் போன்ற (தி)

### அடிகள்

திருவும் அரிய செயல்களும் ஓங்குக
திராவிட நாட்டினில் எங்கும்!
அருவியைப் போலும் அறிஞரின் உள்ளம்
அழகிய நூல்பல நல்க!
திரைகடல் மூன்றொடு வங்க வடக்கெல்லை
சேரும் திராவிடநாடு செழித் தோங்க. (தி)

பொங்கற் புதுநாளைத் தோற்றி எழுந்த
பொன்வெயில் வாழிய நன்றே!
தெங்கு, கமுகு, செங்கரும்பும் விளைக!நன்
செய்யும் வளங் கொழிக்க என்றும்
எங்கள் விடுதலை மறுப்பவர் ஒழிக
இன்பத் திராவிடம் வாழிய நன்றே. (தி)

❄ ❄ ❄

# பொங்கற் பாட்டு

பொன்னோ, பொன் ஏடவிழ்ந்த
பூவோ "எழுந்தகதிர்"
தென்னாடு பூரித்தது தோழி – இருள்
சென்றே மறைந்த தென்ன தோழி?

இன்னாத ஆட்சி எனில்
வாழாது வாழிய நம்
தென்னாட்டு விடுதலை தோழா – புதுச்
செம்பரிதி பூரித்தது தோழா.

தைப் பொங்கல் இன்பம்
தரும்பொங்கல் உண்டாடப்
பொற்பந்தல் வானோடு தோழி – கதிர்
போடும் வியப்பென்ன தோழி?

முப்பாங்கும் ஆழாழி
முன்விந் தியக் குன்றின்
இப்பாங்கு நம் ஆட்சி தோழா – கதிர்
இட்டான் விழாப் பந்தல் தோழா.

செந்நெல் அடித்ததுவும்
செங்கரும்பு வெட்டியதும்
பொன்னங் கதிர்விளைவு தோழி – பால்
பொங்கிவரும் பொங்கலென்ன தோழி?

தன்னலம் நீக்கி நல்ல
தைப் பொங்கல் இட்டெ வரும்
தென்பாங்கு பாடுவதில் தோழா – இன்று
சேர்ந்தின்பம் எய்திடுவர் தோழா.

மூடுபனிப் பகையின்
முட்டறுத்துக் கீழ்க்கடலில்

பாடி எழும்பரிதி தோழி! அந்தப்
பாட்டுக்குப்பொருளென்ன தோழி?

கூடு திறந்திடவும்
கொஞ்சு தமிழ்க் கிளிகள்
காடு பழம்பழுக்கத் தோழா – மிகக்
'கண்ணா யிருக்க'என்னும் தோழா.

ஆவின் நறும்பால், நெய்
யாழியுள முத்தரிசி
தூவும் பருப்பேலம் தோழி – வெல்லம்
தோய்ந்த சுவைப் பொங்கலென்ன தோழி?

நாவலந் தீவினிலே
நம்கல்வி நம்ஒழுக்கம்
தேவைசிறந்த வென்று தோழி – நன்கு
செப்புவது தைப்பொங்கல் தோழா.

தேனோடு முக்கனிகள்
தென்னாட்டுப் பண்ணியங்கள்
ஏனோடி பொங்கலுடன் தோழி – சுவை
ஏற்றி நுகர்ந்தார்கள் தோழி!

மீனோடு வில் புலியும்
மேவு கொடி மூவரசின்
மேனாள் சுவையுணரின் தோழா – நமை
விட்டுப்பிரிந்திடு மோ தோழா.

எல்லார்க்கும் நல்லாடை
எல்லார்க்கு மே பொங்கல்
இல்லாமையே இல்லை தோழி – எனில்
என்றைக்கும் வாய்க்குமோ தோழி?

பொல்லாத ஆட்சியினைப்
போக்கித் திராவிடரின்
செல்வாக்கில் இற்றைநிலை – தோழா
தேயாது செய்திடுவோம் தோழா.

எங்கும் மகிழ்ந்தாடி
இன்பத் தமிழ் பாடி
மங்கையர் ஆடவர் தோழி – இன்ப
வாழ்விற் பொலிந்தனர் என் தோழி!
அங்கங்குப் பொன்னூசல்
அங்கங்குக்கச்சேரி
பொங்கலோ பொங்கல் என்தோழா – பாற்
பொங்கல் நாள் வாழ்க என்தோழா?

★★★

## திராவிடர்க்குப் பொங்கல் வாழ்த்து

### எழுசீர் விருத்தம்

பொங்கிற்றுப் பால் இனிது
குழைந்தது முத்தரிசி
புத்துருக்குநெய் புறங்கை ஒழுகத்
தங்கத்தைத் தாவுகதிர்
வாழ்த்தியே பாற்பொங்கல்
தைத்திரு நாள் உறவுடன் உண்பீர்
இங்கிருந்த நாள்போல
என்றுந் திராவிடர்
இடர்நீங்கி விடுதலை எய்தி
வங்கத்தை முக்கடலை
மறவர்தோள் காத்திட
வரும்புகழ் மகிழ்ந்து வாழியவே!

★★★

## ஐந்தாம்படை அழிக

அமிழ்தென்று தைப்பொங்கல் உண்டோம்இந் நாளே
தமிழென்று போர்தொடுப்போம் தாவி! – நமைநலிப்பார்
உள்ள பகைவரல்லர்; உட்பகையே ஆம்என்றே
உள்ளுக வாழ்க உயர்ந்து.

## திராவிடர் மீட்சி

### எழுசீர் விருத்தம்

ஒன்றுநம் உள்ளம்; ஒன்றுநம் மகிழ்ச்சி;
ஒன்றுநாம் உண்டதீம் பொங்கல்;
ஒன்றுநாம் அனைவரும்; ஒன்றுநம் உறவும்
உணர்ந்தனம் பொங்கல்நன் னாளில்!
இன்றுபோல் என்றும் இன்பம் ஓங்கிடுக!
இன்பத் திராவிட நாட்டை
நன்றுநாம் மீட்க உறுதிமேற் கொள்வோம்!
நனிவாழ்க திராவிட நாடே!

* * *

## வாழிய பொங்கல் நற்றிருநா

### எழுசீர் விருத்தம்

வாழிய வாழிய திராவிட மக்கள்!
வாழிய பொங்கல்நற் றிருநாள்!
வாழிய தமிழாம் திராவிட நன்மொழி!
வாழிய திராவிடர் உரிமை!
ஏழியல் நரம்பின் யாழுநல் லிசையும்
என்னவே தலைவியர் தலைவர்
சூழுறு காதல் இன்பத் திளைந்த
தூய்வாழ் வோங்குக நன்றே.

* * *

## வாழ்த்து

### வெண்பா

வெல்க தமிழர்! மிகவோங்க செந்தமிழ்தான்!
வெல்க தமிழர் விடுதலை! – பல்க
தமிழர் அறமே! தனித்துயர்க யாண்டும்
தமிழர்நல் வாழ்வு தழைந்து.

* * *

# பதிப்புச் செம்மல் பதிப்பித்த
# பாரதிதாசன் நூல்கள்

பாரதிதாசன் கவிதைகள்
குடும்ப விளக்கு
பாண்டியன் பரிசு
அழகின் சிரிப்பு
தமிழியக்கம்
எதிர்பாராத முத்தம்
இளைஞர் இலக்கியம்
இருண்ட வீடு
இசையமுது
சேரதாண்டவம்
தமிழச்சியின் கத்தி
அமைதி
நல்லதீர்ப்பு
தேனருவி
காதல் நினைவுகள்
பாரதிதாசன் நாடகங்கள்
பிசிராந்தையார்
குறிஞ்சித்திட்டு
பெருமக்கள்
முல்லைக்காடு
கண்ணகி புரட்சிக் காப்பியம்
மணிமேகலை வெண்பா
காதலா கடமையா

T18
R004

Wrapper Printedat Ganesh Printing. Ms-1. Ph : 561039